Registered No. M. 5068.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0]   ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள்.   [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி-ஹு மார்கழி-மீ 20உ 3—1—1949 ஹிஜ்ரி 1368 ரபியுல் அவ்வல்-மீ 3உ திங்கட்கிழமை } இதழ் 46

## ★ பாபுஜீயின் சந்தேசம். ★

ஜெய்ப்பூர் காங்கிரஸ் சுதந்திர இந்தியாவில் நடந்த முதல் காங்கிரஸாகும். அதைவிட மஹாத்பாஜீ மறைவுக்குப்பிறகு முதல் முதலாகக்கூடியகாங்கிரஸ் என்று சொல்வது மிகவும் பொருந்தும். அதிலும்ஒரு சமஸ்தானத்தில் கூடியது இந்தியாவில் நடந்தேறிய புரட்சியை எடுத்துக்காட்டுகிறது. ஒரு காலத்தில் சமஸ்தானங்களில் காங்கிரஸின் பெயரைச் சொல்லுவதும் குற்றமாயிருந்தது. தேசீயக்கொடியைக் கண்டு சமஸ்தானாதிபதிகளின் கண்கள் சிவந்து அரண்மனைகள் கிடுகிடுத்ததும் உண்டு. ஆனால் இன்று ஜெய்பூரில் இந்திய தேசியக்கொடி தனக்குறிய முழு கம்பீரத்துடனும் பறந்துகொண்டிருக்கிறது. பழைய அடிமைத்தூண்கள் இடிந்து விழுந்து புதிய சுதந்திரக் கட்டடம் உருவாகி வருவதற்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும். இதுதான் புரட்சி. குறிப்பிடத்தகுந்த இம்மாறுதலை பக்குவமான முறையில் பிரயோஜனப்படுத்திக் கொண்டால் இந்தியா மஹத்தான காரியங்களை சாதிக்க முடியும். அதில் இந்திய சர்க்காருக்கு இருந்துவரும் கடமையைவிட காங்கிரஸின் கடமைகளை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாது.

ஜெய்ப்பூர் காங்கிரஸில் நிறைவேறிய பல தீர்மானங்களில் 'சந்தேசம்' என்ற பெயருடன் நிறைவேறிய ஒரு தீர்மானம் பொதுவாக இந்தியர்களுக்கும் குறிப்பாக கர்ங்கிரஸ்காரர்களுக்கும் கடமைசளை நினைவூட்டுகின்றது அதை ஜெய்ப்பூர் காங்கிரஸ் நடவடிக்கைகளின் 'ஜீவநாடி' யென்றும் இந்திய முன்னேற்றப்பாதையின் 'திறவுகோல்' யென்றும் சொல்வது மிகையாகாது. அரசியல் சுதந்திரம் கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தேசத்தின் தந்தை மகாத்மா காந்திஜீயின் போதனைகளைப் பின்பற்றி அவர்காட்டிய வழியில் முன்னேற வேண்டுமென்று அதில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தீர்மானத்தை பண்டிதஜவஹர்லால்நேரு பிரேரேபித்து கீழ்வருமாறு பேசினார். எவ்வித ஆயுதமுமின்றி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பணியவைத்த உலக மகாபுருஷர் இன்று நம்மிடையே இல்லையாயினும் அவருடைய அடிச்சுவடுகள் இருக்கின்றன. அதைப் பின்பற்றுவதன் மூலம் உலகத்தின் மாபெரும் நாடுகளின் முன்னணியில் இந்தியா உயரிய ஸ்தானத்தைப் பெறமுடியும். அமைதியுடன் நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழச் செய்யவேண்டுமென்பதே காந்திஜீயின் விருப்பம். நம்முடைய வழி தெளிவானது. பாகிஸ்தான் பயப்படத்தேவையில்லை. பாகிஸ்தானைத் தாக்கவோ, சேர்த்துக்கொள்ளவோ, இந்தியா விரும்பவில்லை பாகிஸ்தான் தானாகவே சேர முன் வருவதானாலும் அதை நாம் நன்றியுடன் கிராகரித்து விடுவோம். இரண்டு வருஷங்களுக்கு முன் அநேக கஷ்டங்கள் வந்தபோது நமக்கு வழிகாட்ட காந்திஜீயிருந்தார். காந்திஜீ கொல்லப்பட்டது இந்தியாவின் பெரிய துரதிர்ஷ்டம். நாம் ஆதரவிழந்துவிட்டோம்.

இன்றைக்கும் நாட்டில் வெறி நிலவுகின்றது. சேவக் சங்கத்தின் சத்தியாக்கிரஹமே அதற்கொரு உதாரணம். நல்ல காரியங்களுக்கு சத்தியாக்கிரஹம் செய்யலாம். கெட்டகாரியங்களுக்கு சத்தியாக்கிரஹம் செய்வது பொருந்தாது. வகுப்புவாத பலாத்கார நடவடிக்கைகள் விட்டு வைக்கப்படமாட்டாது. அநேக கஷ்டங்கள் எதிர்நோக்கும் இன்று வகுப்புவாத விஷம் பரவுவதை அனுமதிக்க முடியாது.

இந்தியா ஒரு பெரிய நாடு அதன் லட்சியங்கள் உயர்ந்தவை. படத்தில் பெரியதாக இருப்பதால் ஒரு தேசம்பெரிதாகி விடாது. உயரிபலட்சியங்கள்தேவை. இந்தியா பெரிய தேசமென்பதற்கு காந்திஜீயின் நேர்மையேகாரணம். தேசத்தை இன்னும் பெரிதாக்குவது நம்பொறுப்பு. நற்காரியங்கள்நற்பயனைத்தருமென்றுகாந்திஜீ நிரூபித்துவிட்டார். கடந்த இரண்டு வருஷ சம்பவங்களால் இந்தியா வெட்கப்பட வேண்டியிருக்கிறது நாட்டில் குறுகிய மனப்பான்மை வளர்ந்து வருகிறது. இந்தியாவுக்கு முன் இரண்டு வழிகளிருக்கின்றன. பெரிய நாடாக விளங்கலாம் அல்லது பல கூறுகளாக சிதறிப் போகலாம். இதைத்தவிர மூன்றுவது வழியில்லை.

காங்கிரஸைக்குறித்து நாம் பெருமைப்படுகிறோம். நம்மை தலைவர்களாக்கியதும் இந்திய சுதந்திரத்தை வாங்கியதும் அதேஸ்தாபனம்தான். காந்திஜீ அதற்கு வழிகாட்டினர். அவருடைய மறைவால் நம் பொறுப்புக்கள் அதிகரித்துவிட்டன. விடுதலைக்குப்பிறகு பொறுப்பு குறைந்துவிட்டதாக நினைப்பது தவறு. அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டோம். பொருளாதார சுதந்திரமும் பெற்றுகவேண்டும் காந்திஜீ காட்டிய வழியின் மூலமே அது சாத்தியம் ஆகையால் காந்திஜீயின் வெற்றிவழியில் முன்னேறும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீர்மானத்தை ஆசரிப்பதற்காக மௌலானா அபுல்கலாம் ஆஸாத் ஒலிபெருக்கியிடம் வந்தபோது காந்திஜீயின் அச்சிடப்பட்ட 'சந்தேஸம்' எல்லோருடைய கைகளிலுமிருந்தது. மௌலானா ஆஸாத் பேசியதாவது:

இந்தத்தீர்மானம் பெயரளவில்மட்டும் 'சந்தேஸமல்ல' உள்ளபடியே மகாத்மா காந்திஜீயின் சந்தேஸமாகும். காந்திஜீ இதையே பிரசாரம் செய்தார். உயிருடன் இருந்தவரை அதன்படி நடந்தும் காட்டினர். நாட்டின் முன்னேற்றத்துக்காக அவர் தேர்ந்தெடுத்திருந்த வழி அவருடைய மறைவுக்குப்பிறகு இந்த தீர்மானத்தில் திட்டமிடப்பட்டிருக்கின்றது. இன்று சமுதாயமதை மேற்கொள்ளவேண்டிய தவசியம்.

சுதந்திரம் கிடைத்துவிட்டதால் ஜனங்கள் பெருமிதமடைந்திருக்கின்றனர். பெருமைப்படத்தக்கதே சுதந்திரமென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் உயிர்களை அர்ப்பணித்து மக்கள் போராடிய அந்த சுதந்திரம் கிடைத்துவிட்டதா? ஆங்கிலேயர்கள் உட்கார்ந்திருந்த நாற்காலிகளில் சில இந்தியர்கள் உட்காருவதற்காக மக்கள் சுதந்திரம் கேட்கவில்லை. சுதந்திரம் அறிவை வளர்க்கும்; குருடர்களின் கண்களைத்திறக்கும்; மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும்; பிறகு உலகுக்கு முன் தலைநிமிர்ந்து நிற்கக் கூடிய சந்தர்ப்பத்தை நமக்குக் கொடுக்கும்; என்றெல்லாம் நினைத்தே ஜனங்கள் சுதந்திரத்திற்காக போராடினர்கள்,

சுதந்திரம் கிடைத்த பிறகு துன்பக்கடல் தவிர நமக்கு வேறொன்றும் கிடைத்தவிடவில்லை சுதந்திரத்திற்கு முன்னும், பின்னும் கலகங்கள் மூண்டன. ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் வீடிழந்தார்கள். ஜனங்களுக்கு வெறிபிடித்துவிட்டது. அன்புக்கு பதிலாக உள்ளங்களில் வெறுப்பு குடிகொண்டுவிட்டது. சமூகத்தின் ஜீவநாடியையே காயப்படுத்திவிட்டனர். காயத்தை ஆற்றியாகவேண்டும்.

காந்திஜீயின் சந்தேஸத்தில் அடங்கியிருக்கும் போதனைகள் கொள்கைகள்தான் நாடுதிரும்பவும் சுதந்திரப் பாதையில் முன்னேறுவதற்கான ஒரே வழியாகும் இதரநாடுகளைப்போலவே யுத்த பிற்கால கஷ்டங்களால் சூழப்பட்டிருக்கும் இந்தியா காந்திஜீயின் வழியில் நடப்பதன் மூலமே லட்சியத்தையடைவதுசாத்தியமாகும்.

அரசியல்சுதந்திரம் கிடைத்தபிறகுமக்கள் அமைதியாக வாழ்வதற்கும், எத்தனையோ கஷ்டங்களுக்குப் பிறகு அடைந்த சுதந்திரத்தால் பிரயோஜனமடைவதற்கும் ஏற்ற சூழ்நிலை உண்டாகா விட்டால் நாடு திரும்பவும் வீழ வேண்டியிருக்கும்.

நமக்கு முன் ஒரேவழிதான் உண்டு. அது மகாத்மா காந்திஜீயின் போதனைகளைப் பின்பற்றி சமாதானமாய் வாழும் வழியாகும்.

காந்திஜீயை கௌரவிப்பதற்கு அவருடையபோதனைகளைப்பின்பற்றுவதே சிறந்த முறை பரஸ்பர அன்புடன்நடந்து மக்க்ள்காங்கிரஸை பலப்படுத்தவேண்டும். பிரச்னைகளை தீர்த்துக்கொள்வதற்கு அவசியமான அன்னியோன்யபாவம் நாட்டுக்குத்தேவை. இவ்விதம் இந்தியாவின் கௌரவத்தை நாம் உயர்த்த வேண்டும்.

---

தேச பிதாவின் அன்பு வழியே சமாதானவழி; அமைதிவழி; முன்னேற்றவழி; சகோதரத்துவவழி; சுபிட்சவழி; சத்தியவழியாகும். அவ்வழியில் முன்னேறுவதன் மூலமே இந்தியர்கள் சுதந்திரத்தால் சுகமடைய முடியும்; முன்னேற்றமடைய முடியும்; சகல முட்டுக்கட்டைகளையும் சமாளித்து உலகத்தின் முன் தலைநிமிர்ந்து நிற்கமுடியும்; இந்தியாவில் அமைதியை நிலைநாட்டி உலக சமாதானத்துக்கு உத்திரவாதமளிக்கமுடியும்; ஆசியாகண்டத்துக்கு தலைமைதாங்கி இதுவரை அன்னிய ஆதிக்கத்திலிருந்து வரும் ஆசிய மக்களின் அடிமைத்தளைகளைத் தகர்க்கவும் முடியும்

காங்கிரஸ் இன்றைக்கும் காங்கிரஸாகவே இருப்பது உண்மை. ஆனால் அநேக காங்கிரஸ்காரர்கள் மஹாத்மாஜியின் போதனைகளை மறந்து விட்டார்கள்.

சுதந்திரம் கிடைத்துவிட்டது; அடையவேண்டியதை அடைந்துவிட்டோம்; இனியும் காந்திஜியின் உத்திரவுகளுக்கு கட்டுப்பட்டிருக்கவேண்டிய அவசியமென்ன! பாடுபட்டதற்காக பலனடையவேண்டாமா! இனிகாங்கிரஸின் பெயரால் தேர்தல்களில் வெற்றியடைந்து பதவிகளை ஆக்கிரமிப்பதைவிட்டு, காந்திஜீயின் போதனைகளை பிரசாரம் செய்து அலைவதும், சத்தியம், அன்பு, அஹிம்சை என்றெல்லாம் பேசித்திரிவதும், தன்னலமற்ற சேவையின் பலிபீடத்தில் சுயநலத்தை பலிபடுவதும், நாட்டின் முன்னேற்றத்திற்காக தியாகம் செய்வதும் ஏமாளித்தனமாகுமென்று அநேக காங்கிரஸ்காரர்கள் இன்று எண்ண ஆரம்பித்துவிட்டார்கள்.

காங்கிரஸ்காரர்கள் நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய போக்கால் மகாத்மா காந்திஜீயின் ஆத்மா வேதனையடையாமலிருக்க வேண்டும். காங்கிரஸை காப்பாற்றுங்கள் குறைகளைப் போக்கி பலப்படுத்துங்கள் என்று, ஜீவியத்தைவிட காந்திஜீயின் மரணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் ஆசார்ய வினோபாவே, K.G மஷ்ரூலாலா போன்றவர்கள் முறையிடுகின்றனர். காசியில் காங்கிரஸ்காரர்களின் போக்கால் காங்கிரஸுக்கு ஏற்பட்டு வரும் பலஹீனத்தைச் சுட்டிக்காட்டி காசியில் சர்தார் பட்டேலும் காங்கிரஸ்காரர்களுக்கு புத்திமதிகூறினர்.

இனி காங்கிரஸ் பிற்போக்கை மேற்கொள்ளுமா அல்லது முற்போக்கை மேற்கொண்டு தன்னுடைய பழைய கௌரவத்தை பாதுகாக்குமாவென்ற பிரச்னை காங்கிரஸ்காரர்களைப் பொறுத்தேயிருக்கிறது. ஜெய்பூர் காங்கிரஸில் ஐம்பது லட்சம்பேர் திரண்டிருந்தாலும்கூட அதனால் காந்திஜீயின் போதனைகள் உயிர் பெற்றுவிட முடியாது காந்திஜியின் போதனைகளை புறக்கணித்த ஒரு கூட்டம் எவ்வளவுக்கெவ்வளவு பெருகுமோ அவ்வளவுக்கவ்வளவு காங்கிரஸை மேலும் பலஹீனபடுத்த முடியுமேயொழிய அதைப் பலப்படுத்தி சமூகத்தை சீர்திருத்த முடியாது. நாட்டின் மதக்கிளர்ச்சிகளால் ராஜாராம் மோஹன் ராய், ராமகிருஷ்ண பரமஹம்ஸா, விவேகானந்தா போன்ற உத்தமர்கள் தோன்றினர்கள் அரசியல் கிளர்ச்சிகளால் மஹாத்மா காந்தி, ஹக்கீம் அஜ்மல் கான், டாக்டர் அன்ஸாரி, பண்டித மதன்மோசன மாளவியா, மௌலானா முஹம்மதலி, பண்டித மோதிலால் நேரு, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், மௌலானா மாமூதுல் ஹஸ்ஸன், கோபாலகிருஷ்ண கோகலே, சித்தரஞ்சன் தாஸ், சர்தார் பட்டேல், பண்டித நேரு முதலிய தலைவர்கள் பிரசித்தி யடைந்தார்கள். இன்றைய காங்கிரஸும் வருங்காலத்தில் இம்மாதிரியான உத்தமர்களை உற்பத்தி செய்து இந்தியாவின் பெயரை பிரகாசிக்கச்செய்ய முடியுமென்று எதிர்பார்க்க முடியுமா? காங்கிரஸ் தனக்குள்ளிருக்கும் குறைகளை போக்கிக்கொள்ள வில்லையேல் நாட்டின் குறைகளைபோக்கமுடியுமென்றும், ஜெய்பூர் காங்கிரஸால் பெருமைப்படத்தக்க விளைவுகள் ஏற்பட முடியுமென்றும் எதிர்பார்க்கமுடியாது.

## உள்நாட்டுச் சண்டைக்கு வித்து

(A. M. அல்லாபிச்சை.)

(மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர்.)

முஸ்லிம்களிடம் அன்பு காட்டியதற்காகவே மகாத்மா காந்திஜி கொலைசெய்யப்பட்டார். எனவே இந்தியாவின் சில பாகங்களில் முஸ்லிம்கள் அனுபவித்த கஷ்ட நஷ்டங்கள், கொடுமைகள், இழிவுகளுக்ெல்லாம் காரணமாயிருந்தவர்கள், காந்திஜியின் மரணத்திலுள்ள முக்கியத்துவத்தையும் தன்மையையும் உணரமுடியாது காந்திஜியின் கொலைவழக்கு முடிவடையப்போகும் சமயம் பார்த்து அவர்கள் சத்தியாக்கிரஹம் ஆரம்பித்து விட்டார்கள். நம் தேசிய சர்க்காருக்கு விடுக்கப்பட்டிருக்கும் சவால் மட்டுமின்றி இந்த சத்தியாக்கிரஹம் உள்நாட்டுச் சண்டைக்கும் திட்டமிடப்பட்டதொரு முன்னேற்பாடுமாகும். ஹிந்துக்களில் பலாத்கார உணர்ச்சியுள்ள பலமுள்ள ஒரு பிரிவினர் முஸ்லிம்கள் மீதுள்ள வெறுப்புணர்ச்சியை தங்கள் அரசியல் கொள்கையின் அடிப்படையாக வைத்திருக்கின்றனர். இதைப்பார்க்கும் போது தேசியத்தில் அசைக்க முடியாத பற்றுள்ள ஒரு முஸ்லிம் கூட தன்னுடைய நாட்டின் நியாயமான தன்மையில் நம்பிக்கையிழக்கக் கூடும் இந்த மதவெறியர்கள் ஏற்கனவே இந்தியாவுக்கு அளவிட முடியாத தீங்கு செய்திருக்கின்றனர். அவர்களுடைய துவேஷக் கொள்கை மேலும் நீடிப்பதால் இந்தியா குழப்பங்களுக்கும், துன்பங்களுக்கும் இலக்காகிவிடும்.

மஹாத்மா காந்திஜியின் போதனைகள் நேர்மையுடனும் அந்தரங்க சுத்தியுடனும் நாட்டில் பிரசாரம் செய்யப்படவேண்டும். காங்கிரஸ்காரர்கள் இன்று நிலைதவறிவிட்டார்கள். தன்னலமற்றவர்களாய் இந்தியாவின் உயற்சிக்காக அவர்கள் உழைக்க முன்வரவேண்டும் முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர்ந்து ஸ்தாபனத்தை பலபடையச் செய்யவேண்டும். இந்தியர்கள் எவரும் இன்று முஸ்லிம்கள் மீது அவநம்பிக்கை கொள்ளமுடியாது இந்திய நலனை உத்தேசித்து அவர்களையாவரும் ஒதுக்கித் தள்ளுவதும் சாத்தியமில்லை

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 3—1—'49 திங்கட்கிழமை { இதழ் 46

# பந்தோபஸ்து கவுன்ஸில் முடிவு.

'சமாதிகளை பங்குபோட்டுக் கொள்ளுவதற்காக கூடிய சவத்துணி திருடர்களின் கூட்டம்' என்று காலஞ்சென்ற அல்லாமா இக்பால் புகைந்து போன 'லீக் ஆப் நேஷன்ஸ்' பற்றி அபிப்பிராயம் கூறியிருந்தார். இன்று அவர் உயிருடனிருந்து பந்தோபஸ்து கவுன்ஸிலின் போக்கைப் பார்த்திருந்தால் ஒருக்கால் 'பிணம் தின்னும் கழுகுகள்' என்று சொல்லியிருக்கலாம்.

இந்தோனேஷியப் பிரச்னையில் பந்தோபஸ்து கவுன்ஸில் திரும்பவும் சுயரூபத்தை காட்டியிருக்கிறது. கவுன்ஸிலிடம் பாக்கியிருந்த கடுகளவு நம்பிக்கையையும் கவுன்ஸிலில் நிறைவேறிய தீர்மானம் போக்கிவிட்டது. ஐக்கியநாட்டுக் கொள்கைகளையொட்டி சிறிய நாடுகளின் சுதந்திரத்தையும், ஜனநாயக உரிமைகளையும் பாதுகாத்து பந்தோபஸ்து கவுன்ஸில் உலக சமாதானத்துக்கு உத்திரவாதமளிக்குமென்று இனி நம்புவதற்கில்லை

கவுன்ஸிலுக்குமுன் இந்தோனேஷியா பற்றிய மூன்று தீர்மானங்கள் வந்தன. இருதரப்பினரும் உடனடியாக யுத்தத்தை நிறுத்திவிட்டு சென்றவருஷ இடைக்கால சமரசப்படி நிர்ணயிக்கப்பட்டிருந்த எல்லைகளுக்குவாபஸாகவேண்டுமென்பது அமெரிக்கா கொலம்பியா, சிரியா ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து கொண்டுவந்த முதலாவது தீர்மானம்.

குடியரசுத் தலைவர்கள் உடனே விடுதலை செய்யப்படவேண்டும். யுத்தம் ஆரப்பிப்பதற்கு யார் பொறுப்பென்பதை விசாரித்து ரிப்போர்ட் சமர்ப்பிக்கும்படி சமரசக்கமிட்டிக்கு ஆலோசனை கூறுவதுடன் ஒருவர் மீதும் பழிவாங்கப்படாமல் பாத்துக்கொள்ள வேண்டுமென்பது (சிரியா மூலமாக வந்த) ஆஸ்டிரேலியாவின் இரண்டாவது தீர்மானம்.

ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் முழுப்பொறுப்பையும் ஹாலந்து மீது சுமத்தி, அதன் மிருகத்தனமான போக்கை கண்டித்து, ஹாலந்து படைகள் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பிருந்த பழைய ஸ்தானங்களுக்கு வாபஸாக வேண்டுமென்று உத்திரவிட்டு ஜனநாயகத் தலைவர்களை விடுதலைசெய்து, ஒருவர் மீதும் பழி தீர்க்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்பது ரஷ்யாவின் மூன்ருவது தீர்மானம்.

இம்மூன்றிலும் ரஷ்ய தீர்மானம் முற்றிலும் நியாயமாக இருந்தது. பந்தோபஸ்து கவுன்ஸிலுக்கு இம்மியும் நியாய உணர்ச்சி இருந்திருந்தால் அடுத்தபடியாக ஆஸ்டிரேலிய தீர்மானத்தையாவது நிறைவேற்றியிருக்கலாம் ரஷ்ய, ஆஸ்டிரேலிய தீர்மானங்களை நிராகரித்து விட்டதுடன் நிற்காமல் அமெரிக்க தீர்மானத்திலுள்ள 'சென்ற வருஷ இடைக்கால சமரசப்படி நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்கு வாபஸாக வேண்டுமென்ற பகுதியையும் கவுன்ஸில் விழுங்கி இருக்கிறது.

இருதரப்பினரும் உடனடியாக போரை நிறுத்த வேண்டுமென்பது கவுன்ஸில் நிறைவேற்றிய தீர்மானம். அதில் யார் குற்றவாளியென்று முடிவுசெய்யப்படவில்லை அதைப்பற்றிய பரிசீலனையும் மறுக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஆக்கிரமித்த பிரதேசங்களை விட்டு பழைய ஸ்தானங்களுக்கு வாபஸாக வேண்டுமென்றும் சொல்லப்படவில்லை. இம்மாதிரி தீர்மானம் நிறைவேருமல் இருந்திருந்தால் எவ்வளவோ நலமாய் இருந்திருக்கும்.

ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஹாலந்து இறங்கியிருக்கையில் இருதரப்பினரும் போரை நிறுத்தவேண்டுமென்று சொல்லுவது குற்றத்தை இருவர்மீதும் சுமத்துவதற்கு செய்யப்படும் சூழ்ச்சியாகும். மேலும் குடியரசுத் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய அவர்கள் மீது பழி தீர்த்துக் கொள்ளக்கூடாதென்று தடுக்கப்படவில்லை ஹாலந்து ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களை அதனிடமே ஒப்படைத்து விட்டு அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு சாவதேச அங்கீகாரமளிப்பதே தீர்மானத்தின் நோக்கம்.

குடியரசின் தலைநகரையும் கிட்டத்தட்ட எல்லா பெரிய நகரங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஹாலந்து இத்தீர்மானத்தின் விளைவாக இந்தோனேஷியா முழுவதையும் ஆக்கிரமிப்பது சுலபமாகிவிடும். ஆக்கிரமித்த பிரதேசங்களில் விமானத் தளங்கள், ரேடியோ நிலையங்கள், போக்குவரத்து தந்தி, தபால்,

சாதனங்கள் முதலிய எல்லாவற்றின்மீதும் ஹாலந்தே ஆதிக்கம் செலுத்தும். கிராமாந்திரங்களில் போரிட்டு வரும் கொரில்லாப்படைகள் ஒன்றுஞ்செய்யமுடியாமல் ஆகிவிடுவர். வெளியுலக உதவியைப் போலவே உள்நாட்டு உதவியும் தடைபட்டபிறகு குடியரசுத் தலைவர்கள் ஒன்றுஞ்செய்யமுடியாது. இவ்வித நிர்ப்பந்த நிலைமையிலிருந்துவர எவரும் சம்மதிக்க மாட்டார்களென்பது வெளிப்படை. அந்நிலையில் திரும்பவும் ராணுவ நடவடிக்கையிலிறங்க ஹாலந்துக்கு சாக்கு கிடைத்துவிடும்.

வழக்கம் போல் இந்தோனேஷியப் பிரச்னையிலும் பந்தோபஸ்து கவுன்ஸில் சாம்ராஜ்ய சக்திகளுடன் ஒத்துழைத்திருக்கிறது. போனதடவை போலீஸ் நடவடிக்கைக்குப்பிறகு ஆக்கிரமித்த பிரதேசங்களிலிருந்து ஹாலந்தை வெளியேற்றாமல்விட்டு வைத்திருக்கும் பந்தோபஸ்து கவுன்ஸிலில் இந்தத்தடவை புதிதாக ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களையும் அதனிடமே ஒப்படைத்துவிட முயலுகின்றது. சர்வதேச அபிப்பிராயத்தின் நிர்ப்பந்தத்தால் பந்தோபஸ்து கவுன்ஸில் போரை நிறுத்தும்படி நிறைவேற்றியிருக்கும் தீர்மானம் ஒரு விதத்தில் சர்வதேச அபிப்பிராயத்துக்கு கொடுக்கப்பட்ட சவுக்கடியாகும். கவுன்ஸிலின் முழுநடவடிக்கைகளையும் கவனித்தால் இந்தோனேஷிய நாடகத்தில் பிரிட்டன் 'வில்லன்' வேஷத்தில் நடித்திருப்பது வெளியாகின்றது.

பிரிட்டிஷ் பிரதிநிதி ஹாலந்தில் பலாத்காரப் போக்கை கண்டித்தாலும் ஆக்கிரமிப்பைக் கண்டிக்கவில்லை. காலனிகளை ஆட்சிசெய்வது கௌரவமான பாக்கியமென்று வருணித்தார். குடியரசு தலைவர்கள் மீது நேசநாடுகளுக்கு எதிராக ஜப்பானுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்ததாக குற்றஞ்சாட்டி இந்தோனேஷியாவில் செய்த நற்காரியங்களுக்காக டச்சுக்காரர்களை பாராட்டினார்.

பிரிட்டனின் இந்தப் போக்குக்கு காரணம் வெளிப்படையானது. இந்தோனேஷியாவில் ஹாலந்து செய்ததையே மலாயா, சூடான், முதலிய நாடுகளில் பிரிட்டனும் செய்து வருகிறது. பர்மா, இந்தியா, எகிப்திலும் பிரிட்டன் இதைத்தான் செய்திருக்கிறது. இன்று ஹாலந்துக்கு எதிராக நடவடிக்கைஎடுக்கப்பட்டால் நாளைதனக்கும் இதேநிலைமை ஏற்படுமென்று பிரிட்டனுக்குத் தெரியும் ஆகையால் தான் பிரிட்டன் தன்னுடைய நீசத்தனத்தை உபயோகித்து ஹாலந்தின் ஆக்கிரமிப்புக்கு வெற்றியை வாங்கித்தர முயன்றிருக்கின்றது. அமெரிக்காமுதலியஇதர கைக்கருவி நாடுகள் கண்ணை மூடிக்கொண்டு அதை பின்பற்றியிருக்கின்றன.

ஒழுக்கத்தின் பெயரால், அல்லது சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியால், தங்களுடைய மறைந்து வரும் சாம்ராஜ்யத்துக்கு முட்டுக் கொடுக்க முடியாதென்று பிரிட்டன், அமெரிக்கா, ஹாலந்து, பிரான்ஸ், முதலிய ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகள் உணர வேண்டியதவசியம். ஐரோப்பிய சாம்ராஜ்ய சூழ்ச்சிகளை ஆசியா நன்றாக உணர்ந்து கொண்டுவிட்டது. இந்தோனேஷ்யாவின் டச்சு ஏகாதிபத்திய நடவடிக்கையால் ஆசிய மக்கள் விழிப்படைந்து விட்டனர். சாம்ராஜ்ய சக்திகளுக்கெதிராக ஆசிய நாடுகளின் ஐக்கிய அணி ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை உணர ஆரம்பித்துவிட்டனர் ஸர். ஜபருல்லா சொன்னதைப்போல் டச்சு நடவடிக்கை சாம்ராஜ்ய பாடையில் அறையப்பட்ட கடைசி ஆணியாகும். இனி ஆசியாவில் ஐரோப்பிய சாம்ராஜ்ய சக்தி நிலைத்திருக்க முடியாது. அவர்கள் ஆசியாவை விட்டு வெளியேற வேண்டியிருக்கும். அவர்களுடைய சூழ்ச்சிகள், சாக்கு போக்குகள், போலீஸ் நடவடிக்கைகள், பந்தோபஸ்து கவுன்ஸில்கள் (ஏனெனில் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தை மேற்கு சாம்ராஜ்யவாதிகளே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர்.) ஆசியா விடுதலை பெறுவதை தடுத்துவிட முடியாது.

பந்தோபஸ்து கவுன்ஸிலின் தீர்மானத்துக்குப் பிறகு ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தை நம்புவதும், சாம்ராஜ்ய நண்பர்களை நம்புவதும் எவ்வளவு பிரயோசனமற்றதும், அபாயகரமானதுமாகுமென்பதை ஆசியா நாடுகள் தீவிரமாய் உணருவதன் மூலம் ஆசியாவிலும் உலகம் பூராவிலும் அமைதியான எதிர்காலத்துக்கு அவசியமான தன்னம்பிக்கை உணர்ச்சி மேலும் பலப்படமுடியும்.

---

## முள்ளங்குடி.

கும்பகோணம் தா. கா. கமிட்டித்தலைவர் ஜனாப் அப்துல் மஜீத் தலைமையில் முள்ளங்குடி கிராமகாங்கிரஸ் கமிட்டி தேர்தல் 21—12—48-ல் நடைபெற்றது நிர்வாகஸ்தர்கள் :— (1) S. S. குழந்தைவேல் செட்டியார், தலைவர். (2) V. V. கலியபெருமாள் படையாச்சி, உபதலைவர். (3) M S. வைத்திநாதன் காரியதரிசி (4) S. K. தனபாலன், உபகாரியதரிசி (5) S. V. கோபால்சாமி செட்டியார் பொக்கிஷதார். மெம்பர்கள் :— P. மாரியப்ப சோழகர், K. அருணாசலம், P. V. கோதண்டபாணி படையாச்சி, S. ராசகோபால், K ரத்தின படையாச்சி, V. கோவிந்தசாமி படையாச்சி, ராசி படையாச்சி, S. மருதை படையாச்சி, A. S. பக்கீர் முகம்மது, K. அய்யாசாமி படையாச்சி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

M. S. வைத்திநாதன், காரியதரிசி.

# 20 கோடி ரூபாய் ஹைதராபாத் உண்டியல்கள்.

—— :0: ——

## இதுவரை கேஷ் ஆகவில்லை. ரத்து செய்ய அவசரச் சட்டம் வரும்.

ஹைதராபாத் நிஜாம் இந்திய சர்க்காருடன் ஸ்தம்பன ஒப்பந்தம் செய்துகொண்ட பிறகு பாகிஸ்தான் நிதிமந்திரி மிஸ்டர் உலாம் முஹம்மத், ஹைதராபாத் போயிருந்தார். அவருடைய பேச்சைக்கேட்டு இருபதுகோடி ரூபாய் உண்டியல்களை நிஜாம் பாகிஸ்தானுக்குக் கொடுத்திருந்தார். இந்திய சர்க்கார் அதை ஆக்ஷேபித்திருந்ததுப்பிரச்னைசர்ச்சையிலிருந்து வந்ததும் அனைவருக்கும் தெரியும்.

ஹைதராபாத் நிஜாம் உண்டியல்களை வாபஸ் செய்யும்படி பாகிஸ்தானிடம் கோரினர். ஆனால் பாகிஸ்தான் உண்டியல்களை வாபஸ்செய்ய மறுத்துவிட்டது. இதவரை ஹைதராபாத் கொடுத்திருந்த உண்டியல்களை மார்க்கெட்டில் கேஷ் ( Cash )செய்ய முடியாமல் போய்விட்டதென்று தெரிகிறது.

இந்திய சர்க்கார் அந்த உண்டியல்களை ரத்து செய்துவிட்டு புதிய உண்டியல்களை ஜாரிசெய்ய முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இதைப்பற்றி சீக்கிரத்தில் பிரத்தியேக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுமென்றும், பாகிஸ்தானிடமிருக்கும் குறிப்பிட்ட நம்பர்களுடைய உண்டியல்கள் செல்லாதவையாகக் கருதப்படவேண்டுமென்று அறிவிக்கப்படுமென்றும் தெரிகிறது.

ஃ ஃ ஃ

## அதிராம்பட்டணம்.

18—12—48-ல் கூடிய நகர காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் 23—1—49-ல் இங்கு நடைபெறும் ஜில்லா அரசியல் மஹாநாட்டுக்கு த. நா. கா. கமிட்டி தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்களை தலைமைவகிக்க அழைப்பதென்றும், காங்கிரஸ் கமிட்டிகளில் பதவி வகிப்பவர்கள் கன்ட்ரோல் சாமான்களுக்கான லைசென்ஸோ, பெர்மிட்டோ வைத்திருக்கக்கூடாதென்ற த. நா. கா. கமிட்டி செய்த தீர்மானத்தை புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்வதென்றும், பட்டுக்கோட்டை ராஜாமடம் சேது ரஸ்தாக்கள் சந்திப்புக்கு வடபுறமுள்ள குளத்துத் தண்ணீரால் பக்கத்திலுள்ள கட்டடங்களுக்கும், ரோடுக்கும் சேதமேற்படுவதால் தண்ணீர் வடிவதற்கு ஒரு பாலம் கட்டும்படி ஜில்லா போர்டை கேட்டுக்கொள்வதென்றும், இங்கிருந்து இலங்கைக்கு கப்பலில் பிரயாணம் செய்வதற்கு இவ்வூர் துறைமுகத்தை சீர்திருத்தம் செய்யும்படி மராமத்து இலாகா மந்திரி அவர்களுக்கு ஏற்கனவே அனுப்பியுள்ள தீர்மானத்தை ஞாபகமூட்டி உடனடியாக கவனிக்கும்படி சென்னை சர்க்காரை கேட்டுக்கொள்வதென்றும், தம்பிக்கோட்டை ரஸ்தாவுக்கு கப்பிப்போடவும், நசுவுணி ஆற்றுப்பாலம் கட்டவும் சாங்ஷன் ஆகியிருப்பதைக் குறித்து திருப்தியடைவதுடன் உடனடியாக அவ்வேலையை ஆரம்பிக்கும்படி ஜில்லாபோர்டு ஸ்பெஷல் ஆபீஸரை கேட்டுக்கொள்வதென்றும், இங்குள்ள ஜில்லா போர்டு பாடசாலைகளில் மாணவ, மாணவிகளுக்கு போதுமான இடவசதியில்லாமலிருப்பதால் போதுமான இடவசதி செய்துகொடுக்க ஜில்லாபோர்டு ஸ்பெஷல் ஆபீஸரைக் கேட்டுக்கொள்வதென்றும் ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

R. வரதராஜலு,
காரியதரிசி.

ஃ ஃ ஃ

## திருக்கோயிலூர்.

19—12—48 S. M. A அண்ணாமலைத் தலைமையில் திருக்கோயிலூர் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடந்தது. ஸ்ரீமதி சகுந்தலா, ஸ்ரீ K. F. நரிமன், ஸ்ரீ வெள்ளியங்கிரிக் கவுண்டர் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்தும், ராஷ்டிரபதியான பட்டாபி சீதாராமய்யாவுக்கும் பண்டிதநேரு சர்தார் பட்டேல் ராஜாஜியின் ஜெயந்திகளை முன்னிட்டு அவர்களை வாழ்த்தியும் காங்கிரஸ் கமிட்டிகளில் பதவிவகிப்பவர்கள் கண்ட்ரோல் சாமன்களின் லைசென்ஸோ பர்மிட்டோ வைத்திருக்கக்கூடாதென்ற த. நா. கா. க. தீர்மானித்ததை பாராட்டியும், பொதுஜனங்களிடையே அதிருப்தியை ஏற்படுத்துவதற்கு காரணமாயிருக்கும்ரேஷன் முறையிலுள்ள குறைகளைபோக்கவும் கார்டுகளுக்கு பூராரேஷன் கொடுக்கப்படும்வரை பொதுஜனங்கள் தலை சுமையாய் வாங்கி வருவதைதடைசெய்யாதிருக்கும்படியும் மதுவிலக்கு கமிட்டிகளை அமைப்பதில் சர்க்கார் அதிகாரிகள் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டிகளை கலந்துகொள்ளவேண்டுமென்றும், பாதிக்கபபட்ட மரமேறி தொழிலாளிகளுக்கு வேறுவேலை அல்லது பதனி இறக்கும் லைசென்ஸ் கொடுக்கும்படியும் தாலுகாவில் பிண்ணாக்குக்காக விண்ணப்பித்துக் கொண்ட விண்ணப்பங்கள் அடிப்படையில் நெல் கொள்முதல் செய்யும்படி சர்க்காரையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வதென்றும், ரோடுகள் சீர்திருத்த, பஸ் ஸர்வீஸ்கள் போக்குவரத்து குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஆர் நடராஜன்,
காரியதரிசி.

# அரசியலில் தலையிட மஹா சபை முடிவு.

ஹிந்து மஹா சபை மீண்டும் அரசியலில் கலந்து கொள்வதென்றும் இதர மதத்தினரை ஹிந்துமஹா சபையில் அனுமதிப்பதில்லையென்றும் டில்லியில் கூடிய அகில இந்திய மஹாசபை கவுன்ஸில் தீர்மானித்திருக்கிறது

'ஹிந்து'வின் லட்சணங்கள் யாவை? என்ற கேள்வி பிறந்து, இந்தியாவில் ஸ்தாபிதமான மதத்தைப் பின்பற்றுபவனே 'ஹிந்து' என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது

"அன்று அபாயகரமான வகுப்புவாதத்துக்கு உற்சாகமளித்து வந்ததும், இன்று வகுப்புவாத குற்றம் சுமத்தி தேசிய ஸ்தாபனங்களை நசுக்கி வருவதுமான ஒரு கட்சி அதிகாரத்திலிருந்து வருவதால் எல்லா தேசிய சக்திகளையும் ஒரே மேடையில் திரட்டுவதற்காக தலைவர் ஒரு கமிட்டியை அமைக்கவேண்டும்" என்று இன்னொரு தீர்மானமும் நிறைவேறியது.

---

என்ன குற்றம் செய்ததோ ஜனநாயகம்! இத்தனை பாடுபடுகின்றது. ஆம்! ஜனங்கள் படும் பாடு அத்தனையும் ஜனநாயகமும் பட்டுத்தானே தீர வேண்டும். இதுவரை பட்டதெல்லாம் போதாமல் இன்று ஹிந்துமகாசபைக்காரர்களின் வாயில் வேறு சிக்கியிருக்கிறது. உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தக்காலத்தில் கலப்பற்ற வகுப்புவாதத்துக்கு ஜனநாயகத்தின் போர்வையிட்டு மூடி வெற்றியடைய கனவுகாணுவதென்றால் அவர்களுடைய சாமர்த்தியத்தை மெச்சாமலிருக்க முடியாது குறிப்பிட்ட ஒரு மதத்தினரை மட்டும் அனுமதிக்கும் ஒரு ஸ்தாபனம். ஜனநாயகம் பேசுவதும் தேசீயத்தை நசுக்குவதாக சர்க்கார் மீது குற்றஞ்சாட்டுவதும்தான் இதிலுள்ள விசித்திரமான அம்சம்.

மஹாசபையின் நாற்காலி அரசியல் அனைவருக்கும் தெரியும். சுதந்திரப்போராட்டத்தில் எப்பொழுதுமே ஒதுங்கியிருந்ததுடன் நிற்காமல் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அன்னியர்களை பலப்படுத்தியும் வந்திருக்கிறது முஸ்லிம் லீக் முஸ்லிம் வகுப்புவாதத்துக்கு ஹிந்துமஹாசபையே பொறுப்பு. வகுப்புவாதத்தை பிரசாரம் செய்வது தங்கள் நோக்கமல்ல; லீக் வகுப்புவாத அபாயத்தை தவிர்ப்பதே தங்கள் லட்சியமென்று அடிக்கடி ஹிந்துமஹாசபை சொல்லி வந்திருக்கிறது. மேலும் கூட்டுத்தொகுதி தேர்தல் முறையை ஆதரித்துவந்திருக்கிறது. இன்று முஸ்லிம் வகுப்புவாதம் மறைந்துவிட்டது. கூட்டுத் தொகுதி தேர்தல் முறையை நடத்த அரசியல் நிர்ணய சபை தீர்மானித்திருக்கிறது. எந்த வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கும் இனி சந்தர்ப்பமில்லை இந்நிலையில் மஹாசபை மீண்டும் அரசியலில் பங்கெடுத்துக்கொள்ள முடிவு செய்திருப்பதன் நோக்கம் வெளிப்படையானது.

ரா. சு. சே. சங்கத்தின் மீதுள்ள தடை அகற்றப்படவேண்டுமென்று மஹாசபை கோருகின்றது. எனவே சேவக்சங்கம் ஜனநாயக சக்தி என்பது மஹாசபையின் முடிவு. சேவக் சங்கம் ஜனநாயக சக்தியென்றால் ஹிட்லர், முஸோலினியின் கட்சிகளையும் ஜனநாயக கட்சிகளென்றே செல்லவேண்டும். ஆனால் சேவக்சங்கம் எப்பொழுது ஜனநாயகத்தை மேற்கொண்டதென்று தெரியவில்லை சங்கத்தின் நிதி எவ்வளவு? எங்கிருக்கிறது? எந்தெந்த துறைகளில் செலவிடப்படுகிறது? சங்கத்தின் லட்சியங்கள் யாவை? நோக்கமென்ன? கொள்கை என்ன? வென்று அதன் அங்கத்தினர்களுக்கும் தெரியாது. இந்நிலையில் அதை ஜனநாயக கட்சியென்பதும் அதற்காக பரிந்துபேசி கூச்சலிடுவதும் மஹாசபையின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாயிருக்கின்றது.

மஹாசபையின் நாற்காலி அரசியலும் சுதந்திர போராட்ட காலத்தில் அனுசரித்த போக்கும் பொது ஜனங்கள் மறந்துவிட வில்லை. தேச பக்தர்களுக்கெதிராக உழைப்பதில் வாழ்க்கையை கழித்துவிட்ட பேர்வழிகள் ஹிந்துக்களுக்காக ஒன்றும் செய்துவிடப் போவதில்லை அதற்கு மாறாக அவர்களுடைய நடவடிக்கைகள் தேசத்துக்கும், தேச மக்களுக்கும் அழிவையே கொடுக்குமென்பது நிச்சயம். ஹிந்து நலத்தின் பெயரால் சட்டசபை ஸ்தானங்களை கைப்பற்ற திரும்பவும் அரசியலில் ஜனனமெடுக்கும் மஹாசபைக்காரர்கள் இதுவரை ஹிந்துக்களுக்கு செய்த சேவை என்ன? ஹிந்து மஹாசபைத் தலைவர்களில் பெரிய பெரிய தொழிற்சாலைக்காரர்களும் பணத்திலே மிதக்கும் முதலாளிகளும் இருக்கின்றனர். எல்லாவற்றையுமிழந்து பாகிஸ்தானிலிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடிவந்த ஹிந்து சகோதரர்களுக்காக அவர்களுடைய இரும்புப்பெட்டிகள் திறக்கவில்லை. காலம்

## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

## முள்ளங்குடி கிராமகாங்கிரஸ் கமிட்டி காரியாலயம், மதகுசாலை,

### வருஷாந்திர கணக்கு விபரம்

**1946 அக்டோபர் 17உ முதல் 1948 டிசம்பர் முடிய**

| தேதி | விபரம். | செலவு ரூ. | அ. | பை. | வரவு ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| | கமிட்டி நிர்வாகஸ்தர்கள் நன்கொடை | | | | 176 | 8 | 0 |
| | நிர்வாகஸ்தர்கள் மாதாந்திர சந்தா தொகை | | | | 92 | 4 | 0 |
| | கமிட்டி நிதியின் வட்டி | | | | 7 | 13 | 9 |
| | பொதுமக்கள் நன்கொடை நிதி | | | | 354 | 10 | 0 |
| | **செலவு விபரம்** | | | | | | |
| 17-10-46 | காந்தி ஜெயந்தி பொதுக்கூட்டம் | 61 | 1 | 0 | | | |
| 20-1-47 | கு தா. கா. கமிட்டிக்கு நன்கொடை | 5 | 0 | 0 | | | |
| 15-8-47 | சுதந்திரதின பொதுக்கூட்டம் | 140 | 6 | 9 | | | |
| 13-10-47 | காந்தி ஜெயந்தி பொதுகூட்டம் | 60 | 0 | 6 | | | |
| 13-1-48 | பிரதிநிதி கோயம்புத்தூர் மகாநாட்டுக்குச் சென்ற | 15 | 0 | 0 | | | |
| 31-1-48 | காந்திஜி மறைவுக்கு அனுதாபக்கூட்டம் | 98 | 8 | 0 | | | |
| 11-2-48 | கமிட்டி மெம்பர்கள் க்ரூப் போட்டோ | 25 | 0 | 0 | | | |
| 14-3-48 | திரு, T. K. சீனிவாசன் தலைமையில் பொதுக்கூட்டம். | 90 | 10 | 6 | | | |
| 15-8-48 | சுதந்திரதின கொண்டாட்ட செலவு | 44 | 7 | 0 | | | |
| 6-10-48 | காந்தி ஜெயந்தி கொண்டாட்டம் | 7 | 1 | 0 | | | |
| 1-10-48 | அம்மாசத்திரம் மீட்டிங்க்கு 3பேர் சென்றது | 10 | 9 | 6 | | | |
| | காந்திஜி முழு உருவப்படம் வாங்கியது | 15 | 4 | 0 | | | |
| | தடவை 2 க்கு கார்டு கவர் & லெட்டர் பேப்பர் பிரிண்டிங் | 12 | 12 | 9 | | | |
| 21-12-48 | எலெக்‌ஷனுக்கு வந்த தேர்தல் அதிகாரிக்கு பேட்டா | 2 | 0 | 0 | | | |
| | கமிட்டி மாதந்திரக்கூட்டம் 29-க்கு செலவு உள்பட | 17 | 4 | 6 | | | |
| | செலவு கூடுதல் | 605 | 1 | 6 | | | |
| | மெம்பர்களிடமிருந்து வரவேண்டிய நிலுவை | 19 | 2 | 6 | | | |
| | கையிருப்பு ரொக்கம் | 6 | 15 | 9 | | | |
| | வரவு செலவு கூடுதல் | 631 | 3 | 9 | 631 | 3 | 9 |

**எம், எஸ். வைத்தினாதன் எஸ். கே. தனபாலன், கூட்டு காரியதரிசிகள்**
**எஸ் வி கோபால்சாமி செட்டியார், நிதிகாப்பாளர்**
**எஸ் எஸ். குழந்தைவேல் செட்டியார், தலைவர்.**

மேற்கண்ட அறிக்கை 29—12—48 கமிட்டி கூட்டத்தில் வாசிக்கப்பட்டு கமிட்டியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாறிவிட்டது மதத்தின் பெயரைச் சொல்லி மக்களை மயக்குவது இனி சாத்தியமில்லை. நூற்றுக்கு எண்பத்தைந்து ஹிந்துக்களிருக்கும் நாட்டில் 'ஹிந்து தர்மத்துக்கு ஆபத்து' என்ற கோஷத்துக்கு அர்த்தமில்லை. மதத்தின் பெயரை உபயோகித்து அதிகாரத்தை ஆக்ரமிக்கும்கனவு நனவாகும்காலம் மலையேறிவிட்டது. வகுப்பு வாதத்திற்கு வெற்றிகிடைத்துவந்த சகாப்தம் அன்னிய ஆட்சியுடன் முடிவடைந்துவிட்டது. இனி இந்தியர்கள் அவ்வழியில் செல்லத் தயாராயில்லை. வகுப்புவாதம் ஏற்படுத்திவிட்ட காயங்களை ஜனநாயக சஞ்சீவியைக் கொண்டு ஆற்றுவதென தீர்மானித்து விட்டனர். அவர்களுடைய உறுதியை எந்த சக்தியாலும் மாற்றமுடியாது ஆகையால் நாட்டின்முன்னேற்றத்தையும் பிரகாசமானஎதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு வகுப்புவாத குறுகிய மனப்பான்மையைவிட்டு இந்தியர்களின் பொதுநலனுக்காக உழைக்க மஹாசபைக்காரர்கள் முன்வருவதே புத்திசாலித்தனமாகவிருக்கும்.

**செய்திகள்:-**

## சீனா

சீனாவில் நிமிஷத்திற்கு நிமிஷம் நெருக்கடி முற்றி வருகிறது வட மத்திய சீனாவில் கம்யூனிஸ்டுகளுக்கு வெற்றிகளும், சியாங் படைகளுக்கு தோல்விகளும் கிடைத்துவருகின்றன. அதனால் ஒரு பக்கத்தில் சீன முதலாளி வர்க்கத்துக்கும், இன்னொரு பக்கத்தில் மேற்குசாம்ராஜ்யநாடுகளுக்கும் கவலை அதிகரித்திருக்கிறது தங்கள் தனிப்பட்ட நலன்களுக்கு முற்றுப் புள்ளி விழுந்துவிடுமென்று ஏங்குகிறார்கள். ஷாங்காய், நாங்கிங் நகரங்கள் எந்த நிமிஷமும் தாக்கப்படலாம். சியாங் சர்க்கார் எவ்வளவோ முயன்றும் அவநம்பிக்கை அதிகரிக்கிறது சீனப்படைகள் உற்சாகமிழந்துவிட்டன. அவர்களுக்கு போதிய ஆயுதங்களில்லை. அத்துடன் சீனசர்க்கார் பிரதேசத்தில் விலைவாசிகள் உயர்வால் மக்கள் பசிக்கும், பட்டினிக்கும் பலியாகி நிலைமை படுமோசமடைந்திருக்கிறது அதன் பயனாக வெறுப்பேற்பட்டு பொதுஜனங்கள் சர்க்காருடன் ஒத்துழைப்பதில்லை. லஞ்சமும் கள்ளமார்க்கெட்டும் தாண்டவமாடுகின்றன.

புதிதாக அமைந்த யுத்த மந்திரி சபைதலைவர் டாக்டர் சின் பூ கம்யூனிஸடுகளுடன் கௌரவமான உடன்படிக்கை செய்துகொள்ள விரும்புகிறார் ஆனால் சியாங் சர்க்காருடன் உடன்படிக்கைக்கு கம்யூனிஸ்டுகள் தயாராயில்லை. இருந்திருந்தால் ஜெனரல் சியாங் ஸ்ரீமதி சியாங், மாஜி பிரதம மந்திரி, பிரதம சேனாதிபதி ஆகியோரை யுத்த குற்றவாளிகளென்று கம்யூனிஸ்டுகள் அறிவித்திருக்கமாட்டார்கள். இந்த அறிவிப்பு சியாங் கோஷ்டிக்கு இறுதி எச்சரிக்கை யாகும் சியாங்கும் அவருடைய சகாக்களும் ராஜீநாமா செய்துவிட்டு ஓடவேண்டும் அல்லது புதிய மந்திரி சபை அவர்களை ராஜிநாமா செய்யும்படி நிர்ப்பந்திக்க வேண்டுமென்பது இந்த அறிவிப்பின் நோக்கம். சியாங் கோஷ்டி அதிகாரத்திலிருக்கும்வரை கம்யூனிஸ்டுகள் உடன்படிக்கைக்குவரமாட்டார்களென்பதால் சியாங் கோஷ்டியாரிடையே பிளவு ஏற்படுவது சகஜம்.

இன்னொருபக்கம் சியாங் சர்க்கார் தலைநகரைப் பாதுகாக்க மேலும் உதவியை குவித்துவருகிறது. வாபஸாகும் போது சில படைகள் பொசுக்கல் கொள்கையை அனுஷ்டிக்கின்றன. இந்தக்கொள்கை எந்த அளவுக்கு வெற்றியடையக் கூடுமென்பது வெளிப்படை.

## பாலஸ்தீனம்.

பாலஸ்தீனத்தில் சமரசம் செய்துவைக்க ஐக்கிய நாடுகள் செய்துவரும் முயற்சி பலனளிப்பதாகத் தெரியவில்லை. யூதர்கள் சண்டித்தனத்தை விட்டுவிடத்தயாராயில்லையென்றே தெரிகிறது. சமீபத்தில் கிடைத்த செய்திகளின்படி யூதர்கள் நஜப்பிரதேசத்தில் திரும்பவும் யுத்தத்தை ஆரம்பித்து எகிப்திய எல்லைக்குள் பிரவேசித்திருக்கின்றனர். எகிப்திய படைகளுடன் நேரடியாக போர் நடக்கின்றது. யூதர் படைகள் ஆகாய விமானங்களையும் வெடிகுண்டுகளையும் உபயோகிக்கின்றனர்.

இன்னொருபுறம் டிரான்ஸ் ஜார்டன் மன்னர் அப்துல்லா அரபியர்கள் ஆதிக்கத்திலுள்ள பாலஸ்தீன பிரதேசத்தை டிரான்ஸ் ஜார்டனுடன் இணைத்து தன்னுடைய ஆட்சியை விஸ்தரித்துக் கொள்ளும் சூழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். அரபு லீக்கின் முடிவுகளை புறக்கணித்து அப்துல்லா செய்த துரோகத்தால் புதிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது டிரான்ஸ் ஜார்டன் மந்திரிசபை அப்துல்லாவை ஆதரிக்கின்றது. பாலஸ்தீன அரபு காங்கிரஸ் டிரான்ஸ் ஜார்டனுடன் பாலஸ்தீன அரபுபிரதேசம் இணைக்கப்பட வேண்டுமென்று வேண்டிக் கொண்டதாக இவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள் ஆனால் அரபு காங்கிரஸ் என்னவென்பதே புதிராய் இருக்கின்றது.

## நிஜாம் — நேரு சந்திப்பு

இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு ஹைதராபாத் விஜயம் செய்தார். அதிகார பூர்வமாக அவர் ஹைதராபாத்துக்குவிஜயம் செய்தது இதுதான் முதல்தடவை. இதுவரை பொது மக்களிடையே பலவாறான அபிப்பிராயங்களுக்கு காரணமாயிருந்துவந்த ஹைதராபாத் பிரச்னை பிரதம மந்திரி பண்டித நேருவின் விஜயத்திற்கு பிறகு சுமுகமான முறையில் சீக்கிரமே தீருமென்று நம்பலாம்.

ஹைதராபாத் நிஜாம் மீர் உஸ்மான் அலிகான் போவார்ம் ரெஸிடென்ஸிக்கு வந்து இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவை சந்தித்தார் தானிருந்த அறையின் வாயிலில், ராஜஉடை அணிந்திருந்த நிஜாமை, பண்டிதநேரு வரவேற்றார். அவருடன் பலபிரமுகர்கள் இருந்தார்கள். மத்தியான ஆகாரத்திற்குப்பிறகு பண்டிதநேருவிடம் விடை பெற்றுக்கொண்டுநிஜாம் அரண்மனைக்குத்திரும்பினார். அதற்கு முன்னால் நிஜாமை சந்திக்க அவருடைய அரண்மனைக்குச் சென்றிருந்த பண்டிதநேரு ஒரு மணிநேரம் நிஜாமுடன் பேசிக்கொண்டிருந்தார். நிஜாமுக்கும் நேருவுக்கும் இதுதான் முதல் சந்திப்பு. பண்டிதநேரு நிஜாமுடன் ஹைதராபாத் அரசியல், சமூக பிரச்னைகளைப்பற்றி விவாதித்தார். இந்த சந்திப்பின் பயனாக சம்பந்தமான அரசியல் விஷயங்களில் சில முக்கிய மாறுதல்கள் ஏற்படலாமென்று அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன

முஸ்லிம் பிரமுகர்களின் ஒரு தூது கோஷ்டியும் பண்டிதநேருவை சந்தித்து ஹைதராபாத் முஸ்லிம்களின் விஸ்வாசம், ஒத்துழைப்பு குறித்து உறுதியளித்தது. பீரார் இளவரசரும் பண்டிதநேருவை சந்தித்து அரைமணி நேரம்வரை பேசிக்கொண்டிருந்தார்.

# புரையோடிய வினை.

—(o)—

"டாக்டரை கொஞ்சம் சீக்கிரமாக எழுப்பு; என் பிராணன் போகிறது" என்று வேலைக்காரனிடம் யாரோ சொல்லுவது டாக்டரின் காதில் விழுந்தது. படுக்கையை விட்டு எழுந்து இரவு உடைகளைமாற்றிக்கொண்டு நோயாளியை உள்ளே அழைத்துவரும்படி டாக்டர் ஆக்ஞாபித்தார்.

நோயாளி ஒரு கௌரவமான மனிதன்; பெரிய குடும்பத்தைச் சேர்ந்த கனவானென்பதை அவனுடைய தோற்றம் எடுத்துக்காட்டியது. கழுத்தைச் சுற்றி கட்டித்தொங்கிய ஒரு பட்டுக் கைக் குட்டையில் கிடந்த வலது கையில் கட்டு கட்டியிருந்தது. முகத்தின் வாட்டமும், வேதனையும் உபாதையை வெளிப்படுத்தின.

டாக்டர்:— (நாற்காலியைக் காட்டி) உட்காருங்கள்! உங்கள் கையில் என்ன செய்கிறது?

நோயாளி:— வலி தாங்க முடியவில்லை. டாக்டர்! பிளவையா? அல்லது வேறு ஏதாவதா? ஒன்றுமே புரியவில்லை! ஆரம்பத்தில் லேசான எரிச்சலுடன் கொஞ்சம் வலியுமிருந்தது. இப்பொழுது இரவு பகலாய் தூக்கமில்லை. வலி நிற்காவிட்டால் நான் செத்துப்போவேன். ஆபரேஷன் செய்வதாயினும் அல்லது தீய்ப்பதாயினும் எது வேண்டுமானாலும் செய்யுங்கள். எப்படியும் நீங்கினால் போதும்.

டாக்டர்:— பயப்படவேண்டாம் ஆபரேஷனுக்கு அவசியமிருக்காதென்று நினைக்கிறேன்.

நோயாளி:— இல்லை டாக்டர்! ஆபரேஷன் அவசியம். அதற்காகத்தான் வந்தேன். ஆபரேஷன் செய்யுங்கள். அதைத்தவிர வேறு வழியில்லை. (கையிலிருந்த கட்டை அவிழ்த்துக் கொண்டே) நீங்கள் என் கையைப்பார்த்து ஆச்சரியப்படுவீர்கள். வீககமோ, ரணமோ ஒன்றுமே யில்லை. இது என்ன வியாதியோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்!!

டாக்டர் கையைப்பார்த்து ஆச்சரியப் பட்டார் இடது கையைப்போலவே வலதுகையும் பூரண ஆரோக்கியத்துடனிருந்தது

டாக்டர்:— எங்கே வலிக்கிறது?

இடதுகையால் இரண்டு நரம்புகளுக்கு மிடையே ஒரு இடத்தைநோயாளி சுட்டிக்காட்டினான். டாக்டர் அந்த இடத்தை மெதுவாக தொட்டுப் பார்த்தார். வலி பொறுக்கமாட்டாமல் நோயாளி கதறினான்.

டாக்டர்:— கையைத் தொடக்கூட முடியவில்லையா?

நோயாளி பதில் பேசவில்லை, அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

டாக்டர்:— விசித்திரமான வியாதி! உங்களுடைய கையில் ஒரு கோளாருமில்லையே!

நோயாளி:— எனக்கோ உபாதையால் பிராணன் போகிறது.

டாக்டர்.— (நோயாளியின் டெம்பரேச்சரைபரிசோதித்த பிறகு பூதக் கண்ணாடியால் நோயாளியின் கையை பரீட்சித்துவிட்டு) உங்கள் கையில் ஒருவித கெடுதியும் இருப்பதாகத் தெரியவில்லை. சருமமும் நரம்புகளும் எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டிருப்பதாகத்தெரியவில்லை.

நோயாளி:— டாக்டர்! இந்த இடத்தை கவனமாகப் பாருங்கள்! இங்கு எரிச்சலிருக்கிறது சருமமும் சிவந்திருக்கிறது.

டாக்டர்:— எந்த இடத்தில்?

நோயாளி கையின் பின்புறத்தில் தன்னுடைய விரலால் ஒரு வட்டம்போட்டுக் காட்டினான். டாக்டர் அந்த இடத்தை கூர்ந்து கவனித்தார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. "விடிந்ததும் விடியாததுமாக பைத்தியத்தைக் கட்டிக்கொண்டு மாரடிக்கும்படி வந்ததே" யென்று மனதில் நினைத்துக்கொண்டார்.

டாக்டர்: (யோசித்துவிட்டு) நீங்கள் எத்தனை நாள் நகரத்தில் தங்கியிருப்பீர்கள்..........சிகிச்சையில் முழு கவனத்தையும் செலுத்தப் படுமென்று உறுதியளிக்கிறேன்.

நோயாளி:— என்னால் ஒரு நிமிஷமும் வலி பொறுக்க முடியவில்லை. இப்பொழுதே ஆபரேஷன் செய்து விடுங்கள். சத்தியமாக நான் பைத்தியக்காரனல்ல.

டாக்டர்:— ஒருக்காலும் என்னால் ஆபரேஷன் செய்ய முடியாது.

நோயாளி:— ஏன் முடியாது?

டாக்டர்:— உங்களுடைய கையில் ஒருவிதமான கெடுதியுமில்லை.

நோயாளி:... நான் பைத்தியக்காரனல்ல. என்னை நம்புங்கள் நான் வேடிக்கை பண்ணுவதற்காக இங்கு வரவில்லை இதோ ஆயிரம் ரூபாய். உங்களுடைய பீஸ் வேண்டுமானால் பெற்றுக்கொள்ளுங்கள்.

டாக்டர்:— நீங்கள் குபேர சம்பத்தையே கொடுப்பதாக இருந்தாலும் அனாவசியமாக நான் ஆபரேஷன் செய்யமாட்டேன்.

நோயாளி.— டாக்டர்! ஆண்டவனுக்காக ஆபரேஷன் செய்துவிடுங்கள்.

டாக்டர்:— அதுதான் என்றால் முடியாது. கௌரவமான என் தொழிலுக்கு பணத்துக்காக தீங்கு செய்யமாட்டேன்.

நோயாளி:— அப்படியானால் சரி! என்னுடைய கையினால் நானே ஆபரேஷன் செய்துகொள்ளுகிறேன். பிறகு நீங்கள் கட்டாவது கட்டிவிடுங்கள்.

நோயாளி சட்டையைக் கழற்றி வைத்துவிட்டு மேஜைமேலிருந்த கத்தியை கையிலெடுத்தான். நரம்பை வெட்டிக்கொண்டால் என்னசெய்வதென்று டாக்டருக்கு பயமுண்டாயிற்று.

டாக்டர்.— சொஞ்சம் பொறுங்கள். செய்தேயாகவேண்டுமென்று நீங்கள் பிடிவாதம் பண்ணினால் ஆபரேஷன் நானே செய்கிறேன். முகத்தைக் கொஞ்சம் வேறுபக்கம் திருப்பிக்கொள்ளுங்கள்.

நோயாளி:— இல்லை டாக்டர்! ஆபரேஷன் செய்யவேண்டிய இடத்தை நானே காட்டுகிறேன்.

காட்டிய இடத்தில் ஆபரேஷன் நடந்தது. நோயாளி நிம்மதியுடன் பெருமூச்சுவிட்டார்.

டாக்டர்:— இப்பொழுது எப்படியிருக்கிறது. வலிகுறைந்துவிட்டதா?

நோயாளி:— (புன்சிரிப்புடன்) வலியில்லை. கீரிய இடத்தில் கொஞ்சம் எரிச்சல் மட்டுமிருக்கிறது. ரத்தம் நன்றாக வடியட்டும். எனக்கு ஆனந்தமாக இருக்கிறது.

டாக்டர் கட்டுக் கட்டிய பிறகு நோயாளி தான் இறங்கியிருந்த ஹோட்டலின் விலாசத்தைக் கொடுத்துச் சென்றான். சிலதினங்களுக்குள் ரணம் ஆறி நோயாளியும் தன் ஊருக்குச் சென்றுவிட்டான்.

மூன்று வாரங்கள் சென்றன திரும்பவும் கதறிக்கொண்டு நோயாளி டாக்டரின் அறைக்குள் நுழைந்தான். அவனுடைய கை முனபோலவே பட்டுக் கைக்குட்டையில கிடந்தது.

நோயாளி:— (டாக்டரின் கையை நீட்டி) திரும்பவும் வலிதாங்க முடியவில்லை போனதடவை தாங்கள் செய்த ஆபரேஷன் போதாது போலிருக்கிறது. இம்முறை கொஞ்சம் பெரிய ஆபரேஷனாக செய்யுங்கள் டாக்டர்!

டாக்டர்:— கையை பரீட்சித்தார். ஒரு கெடுதியும் இருப்பதாகத் தெரியவில்லை. காயம் ஆறிப்போயிருந்தது ஆனால் நோயாளியோ உபத்திரவம் தாங்கமாட்டாமல் கதறிக் கொண்டிருந்தான். திரும்பவும் ஆபரேஷன் நடந்தது வலிநீங்கி விட்டதாயினும் நோயாளியின் முகத்தில் ஏமாற்றம் காணப்பட்டது.

நோயாளி:— இன்னும் ஒரு மாதத்திற்குப் பிறகு திரும்பவும் வரவேண்டியிருக்குமோவென்று அஞ்சுகிறேன்.

டாக்டர்:— நீங்கள் ஒரு சந்தேகப் பேர்வழி கடவுள் கிருபையால் இந்த வியாதி மறுமுறை வராதென்று நம்புங்கள்.

நோயாளி:— ஆண்டவன் இருப்பது நிச்சயமாயிருப்பதைப் போலவே இந்த வியாதி திரும்பி வருவதும் நிச்சயம்.

விசித்திரமான இவ் வியாதியைப்பற்றி சக டாக்டர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டுப்பார்த்தும் வியாதியைக் கண்டுபிடிக்க டாக்டரால் முடியாமலேயே போய்விட்டது.

ஒரு மாதம் கழிந்தும் நோயாளி திரும்பிவரவில்லை. சில தினங்களுக்குப் பிறகு நோயாளியிடமிருந்து கீழ்கண்ட கடிதம் கிடைத்தது.

அன்புமிக்க டாக்டர்! வந்தனம்.

என்பயங்கர நோயின் காரணம் ஒருவருக்கும் தெரியாமல் சவக்குழியில் என்னுடன்கூடவே புதைக்கப்படுவதை நான் விரும்பவில்லை. மூன்றாவது முறையாக திரும்பவும் வலி ஆரம்பித்தது. வேறு உபாயம் தோன்றாமல் வலித்த இடத்தில் நெருப்புக் கட்டியை வைத்துப் பார்த்தேன் அதனால் கொஞ்சம் வலி குறைந்திருக்கிறது என்னைப்பற்றிய சோகக்கதையை எழுதுகிறேன். மனதை திடப்படுத்திக் கொண்டு படிக்கும்படி வேண்டுகிறேன்.

கல்யாணமாய் பதினெட்டு மாதங்களாயின ஆறு மாதங்களுக்கு முன்வரை இன்பமயமான வாழ்க்கை நடத்தினேன். எனக்கு வாய்த்த மனைவி நல்ல அழகி நேர்மையானவள்; குணவதியுங்கூட. அவளுக்கு ஒரு தோழியுண்டு. அவளும் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவள்.

என்னுடைய மனைவி என்னை மனப்பூர்வமாய் காதலித்தாள். என்றைக்காவது நான் வெளியூர் சென்றிருந்தால் என்வரவை எதிர்பார்த்து வாசலில் காத்துக்கொண்டிருப்பாள். அந்தோ!............மனிதன் தன்னுடைய சுகவாழ்க்கைக்கு தானே கேட்டைத் தேடிக்கொள்வது ஏனோ! என்மனைவி என்னைக் காதலிப்பதாக ஒருகால் நடிக்கிறாளோவென்ற சந்தேகம் ஒருநாள் என் மனதில் உண்டாற்று. நாளாவட்டத்தில் அதுவளர்ந்து நிச்சயமாக மாறிவிட்டது தையல் வேலைகளுக்காகவென்று என்மனைவிக்கு ஒரு தனி மேஜையுண்டு. அதில் ஒரு அறை எப்பொழுதும் பூட்டப்பட்டேயிருக்கும். அதனால் என் சந்தேகம் மேலும் வலுத்தது.

ஒருநாள் அவளுடைய தோழி வந்து தன்வீட்டுக்கு அழைத்துச் சென்றாள் மாலையில் திரும்பிவருவதாகசொல்லிஎன்மனைவி அவளுடன்சென்றிருந்தாள். அவள் போனவுடன் அவளுடைய மேஜையைத் திறந்தேன். அதில் தையல் சாமான்களுடன் நீலநிறமான உறையில் சிலகடிதங்களுமிருந்தன காதல் கடிதங்கள்! காதலன் காதலிக்கு எழுதிய கடிதங்கள்! அத்தனையும் என் கல்யாண தேதிக்குப் பிறகே எழுதப்பட்டவை! ஒரு கடிதத்தைப் பிரித்துப்படித்தேன். கடிதமல்ல! காதலின் நீண்டகதை! வெட்கக் கேட்டை திரும்பவும் உரையிட்டு மேஜையில் வைத்துப் பூட்டினேன்

எனக்குள் வஞ்சத்தீ கொழுந்துவிட்டு எரிந்தது. ஒவ்வொரு நரம்பிலும் ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது என்மனைவி மாலையில் திரும்பினாள். எப்பொழுதும் போல் அன்பாகவே நடந்துகொண்டாள். அவளுடைய துணிச்சலைப் பார்த்து எரிச்சலாக இருந்தாலும் தன் னடக்கத்துடன் நடந்துகொண்டேன். மனதிலிருந்த கோபத்தைக்காட்டிக் கொள்ளவில்லை. இரவு ஆகாரத்துக்குப் பிறகு அவரவர்களுடைய படுக்கை யறைகளுக்குச்சென்றோம்.

எனக்கு நித்திரை எப்படிவரும்! மோசக்காரி சண்டாளியை தண்டிக்கும் முறைகளைப்பற்றி சிந்திக்கலானேன். கடைசியில் ஒரு முடிவுக்குவந்து சந்தடி செய்யாமல் அவள் படுத்திருந்த அறைக்குள் புகுந்தேன். பாதிராத்திரி வேளை. உலகமே தூங்கிக் கொண்டிருந்தது. ஐயோ! அந்த கற்புக்கரசியும் மெய்மறந்து தூங்கினாள். தூக்கத்திலும் அவளுடைய அழகு மனதைக் கவர்ந்தது. துரோகத்தை திரையிட்டு மூடிவைத்திருக்கும் அழகை சபித்தேன்.

திடீரென்று அவளுடைய குரல்வளையைப்பிடித்து முழு பலத்தையும் கொண்டு நெறித்தேன். அவள் கண்களை அகல விரித்து பரிதாபகரமாக என்னைப்பார்த்தாள். கடைசிமுறையாக விடை பெற்றுக்கொள்வது போல் தோன்றிற்று. அந்தப்பார்வை கல் நெஞ்சத்தையும் கரைத்திருக்கமுடியும் கைதேர்ந்த கொலைக்காரனும் திணறிப்போயிருப்பான். ஆனல் நான்! சண்டாளனாகிய நான்! மேலும் பலமாக நெறித்துக் கொன்றுவிட்டேன். உயிர் போகும்போது அவளுடைய வாயிலிருந்து தெறித்த ஒரு துளி இரத்தம் என்னுடைய கைமேல் நீங்கள் ஆபரேஷன் செய்த அதேயிடத்தில் விழுந்தது.

நண்பர்களும், உறவினர்களுமாக ஏராளமான ஜனங்கள் கூடினார்கள் மாலையில் சவத்தை அடக்கம் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். என்னுடைய மனம் என்னை கொஞ்சமேனும் சபிக்கவில்லை.

மறுநாள் காலையில் துக்கம் விசாரிக்க என்மனைவியின் தோழி வந்தாள். துக்கம் விசாரித்த பிறகு "என் தோழியிடம் சில கடிதங்களைக் கொடுத்திருந்தேன். தயவுசெய்து அதைப்பார்த்து எடுத்துக் கொடுங்கள்" என்று தயக்கத்துடன் கேட்டாள்.

"கடிதங்களா? எதைப்பற்றிய கடிதங்கள்? அவற்றில் என்ன எழுதப்பட்டிருந்தது?" என்னுடைய நெஞ்சு படபடவென்று அடிக்கவாரம்பித்தது.

"தயவுசெய்து அதைப்பற்றி கேட்கவேண்டாம். அது என் சொந்த விஷயம்பற்றிய கடிதங்கள். நானும் படிக்கமாட்டேன்; வேறு எவருக்கும் காட்டமாட்டேனென்று என் சிநேகிதி உறுதி கூறியிருந்தாள். தன் வார்த்தையை அந்தஉத்தமி பூர்த்தி செய்திருப்பாளென்ற நம்பிக்கை எனக்கு உண்டு"

"கடிதங்களை அவள் எங்கே வைத்திருந்தாள்?"

"தையல் சாமான்களிருக்கும் மேஜையில் வைத்துப்பூட்டி யிருந்தாள். கடிதங்கள் நீல நிறமான உறையில் இருக்கின்றன."

உள்ளே போய் எடுத்துவந்து அவளிடம் காட்டினேன். கடிதங்களை வாங்கிக்கொண்டு அவள்போய் விட்டாள்.

என்னுடைய பயங்கரமான தவறை உணர்ந்தேன். அவள் நிரபராதி என்ற எண்ணம் என்னை உறுத்த ஆரம்பித்தது. வாழ்க்கை குட்டிச்சுவராகி விட்டது ஒரு வாரத்துக்குப் பிறகு என் மனைவியின் வாயிலிருந்து தெறித்த ரத்தத்துளி விழுந்த இடத்தில் லேசாக எரிச்சல் உண்டாயிற்று. பிறகு வலிக்க ஆரம்பித்தது. என்னுடைய வியாதியின்காரணம் இது தான். இதற்கு என்னுடைய மனவேதனை காரணமாயிருக்கலாம். ஆயினும் இந்தப்புரையோடிய வினையின் வேதனை என்னால் தாங்க முடியவில்லை. வினைப்பயனை நான் அனுபவித்தே யாகவேண்டும். ஆகையால் இனி சிகிச்சை என்ற எண்ணத்தையும் விட்டுவிட்டேன். அவளை சந்தித்து மன்னிப்புக் கோருவதற்காக இன்று வாழ்க்கையை முடித்துக்கொண்டு பிரயாணமாகிறேன். அவள் என் பாவத்தை மன்னிப்பாளென்ற நம்பிக்கை எனக்கு உண்டு பிரகாசமான அவ்வுலகில் இருளடைந்துவிட்ட எங்கள் உள்ளங்களை அன்பின் ஒளியால் திரும்பவும் பிரகாசிக்கச் செய்யப் போகிறோம்.

டாக்டர்!......... உங்களுடைய உதவிகளுக்கு வந்தனம்.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது "ஆஸாத்" விற்பனை செய்ய

**ஏஜெண்டுகள் தேவை..**

# மதம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

தத்துவ ஞானத் துறையிலும் மத எண்ணங்களி லும் மாத்திரம் இந்த ஒற்றுமை தொடங்கவில்லே. முஸ்லிம் மன்னர்கள் கோயில்களுக்கும் மடங்களுக் கும் மானியம் அளித்ததற்கும், இந்து பக்தர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஜாகீர்கள் அளித்ததற்கும எண் ணற்ற உதாரணங்கள் காணலாம். முஸ்லிம் அரசர் கள் இந்துக் கோயில்களேயும் மதஸ்தாபனங்களேயும் அழித்ததாகக் கணக்கிடப் படுவதைபோல, அவை களுக்கு மானியங்கொடுத்து ஆதரித்ததற்கு ஒரு விரி வான கணக்கெடுத்து யாரேனும் ஓர் அறிஞர் தொகுத் தால், அது நல்லதொரு சேவையாகும்

'வழக்கமாகக் கலாசாரக் கூட்டுறவு இல்லாவிட் டால், முஸ்லிம் அரசர்கள் ஏன் இந்துக்களுடைய தேவாலயங்களுக்கும், வித்தியாலயங்களுக்கும் மானி யம் அளிக்கவேண்டும்? இந்து அரசர்கள், முஸ்லிம் மசூதிகளுக்கும் மதர்சாக்களுக்கும் ஏன் மான்யங்கள் அளிக்கவேண்டும்? அடில்ஷாஹி, குதுப்ஷாஹி, ஆசப்ஷாஹி வமிசத்தார் பிராமணர்களுக்கு இத்த கைய் மானியங்களே அளித்ததைத் தென்னிந்தியச் சரித்திரம் உணர்ந்தவர்கள் நன்கு அறிவார்கள். இதைப்போன்ற மானியங்கள் மகாராஷ்டிர அரசர் களால் முஸ்லிம் தொழுகை ஸ்தலங்களுக்கு, தாங்கள் டில்லி சக்கரவர்த்தியோடு சண்டையிட்டதற்கப்புற மும் அளிக்கப்பட்டன.' பீஹாரில் இத்தகைய இரண்டு உதாரணங்களேத் நான் தரமுடியும். புத்த கயாவின் மகந்துவினுடைய ஜமீன்தாரியிலிருந்து கிடைக்கிற வருஷ வருமானம் லடசக் கணக்கிலிருக் கிறத. இவ்வருமானம், நான்காவது மகந்து லால்கிர் என்பவருக்கு டில்லி மஹம்மதுஷா, முஸ்தீபுர் தாராதி என்ற கிராமத்தை மானியமாகக் கொடுத்ததிலிருந்தே பெருகியதாகும். இதைப்போன்று, இந்தியாவிலேயே மிகப்பெரிய தர்பாங்கா ஜமீன்தாரியானது, முகலாயச் சக்கரவர்த்தி அக்பரால் இப்பொழுதுள்ள மகாராஜாதி ராஜப்பிராமணரின் மூதாதைக்கு, அவருடைய படிப் பையும் பக்தியையும் வியந்து, நன்கொடையாக அளிக் கப்பட்டதாகும் 'ஹிந்துக் குடிகளிடைக் கல்வி வ்ய பரப்புவதற்கு ஷேர்ஷா வாக்ப்கள் அளித்து, அவை களே இந்துக்களிஷ்டப்படி நிர்வகிக்க விட்டு விட்டார். அவருடைய இத்தாராளச் செய்கையால் அவர் மீது எல்லா மதத்தாரும் அன்பு கொண்டார்கள்.

டாக்டர் சயது மஹமது எனக்களித்த சில உதாரணங்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை:

காஷ்மீர் சுல்தான் ஜைனுலாப்தீன், சாரதாதம் சாரதா தேவி ஆலயங்களுக்குச் சென்று அடிக்கடி தரிசிப்பதுண்டு. யாத்ரீகருக்கு அங்கு சத்திரங்கள் கட்டினர்.

நாஜிபாபாத்தின் பட்டாணியர்கள் ஹரித்து வாரை சுமார் 1780-ல் ஆண்டார்கள் நாஜிபாபாத் நவாப், ஹிந்து யாத்ரீகர்களுக்காகப் பெரிய சத்திரங் கள் கட்டினர். அவை இன்னும் இந்துக்கள் கைவச மிருந்துவருகின்றன.

1588-ல் குரு அர்ஜுன தேவர் அமிர்த சரஸில் ஒரு குளம் வெட்டினர். அதே வருஷத்தில் ஒரு கோயிலேயும் அங்கு கட்டத் தீர்மானித்தார். அதற் குப் பாலாபீர் அல்லது மியான்பீர் எனப்பட்ட ஒரு முஸ்லிம் பக்தரால் அடிகோலும்படி செய்யப்பட் டது.

—சர்தார் உத்தமசிங் எழுதிய அமிருதசரஸ்தர்பா ரின் சரித்திரம்.

ஆலம்கீர் காலத்திய புகழ்பெற்ற பாடாலா முன்ஷி சுஜன் ராய் தன்னுடைய குலாஸ்துல்-தவாரிக் என்ற நூலில், காலானூருக்குப் பக்கத்திலுள்ள தீபா ளிவால் என்ற கிராமத்தைக் குறிப்பிடுகிருர். அங்கு ஷா ஷாம்சுதீன் தார்யாயினுடைய சமாதி இருக்கிறது இதைத்தரிசிக்க ஏராளமான ஜனங்கள் செல்லுகிருர் கள். 'இந்துக்களும் முஸல்மான்களும், ஷா ஷாம் சுதீன் மீது ஆழ்ந்த பக்தி விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிருர்கள். ஆனல் தீபாளி என்ற இந்து, மற்ற இந்துக்கள் முஸ்லிம்களேக் காட்டிலும் மிகுந்த பக்தி மானென்பதை நிரூபித்துக் கொண்டார். ஷாதார்யா யின் மரணத்திற்குப் பிறகு, இந்துக்களும் முஸ்லிம் களும் சேர்ந்து ஏகமனதாக அவருடைய சமாதுக்கு முதல் தர்ம கர்த்தாவாகவும், நிர்வாகியாகவும் தீபா ளியை நியமித்தார்கள். அவர் ஒரு முஸ்லிம் என்பது தெரிந்திருந்தும் அவ்வாறு நியமித்தார்கள் ................ சில வருஷங்களுக்கு முன்பு முஸ்லிம்கள் இந்து நிர்வாகிகளே மதக் காரணங்களால் விலக்கத் தீர்மானித்தார்கள். ஆனல் ஆலம்கீர் ஆட்சி, இந்தக் கிளர்ச்சி பலனடைய விடவில்லே. ஆலம்கீருடைய ஆட்சியின் மூன்ருவது ஆண்டில், இப்புத்தகம் எழு தப்பட்டபோது இந்துக்களே இச்சமாதின் தர்மகர்த் தாக்கள்.' இன்றும்கூட ஹைதராபாத்தில் (தக்கா ணம்), புகழ்வாய்ந்த ஒரு புலவர்க்கின் தர்காவுக்கு மடாதிபதியாக இருப்பது ஒரு பிராமணக் குடும்பமே. நைஜாம் இந்த தர்காவுக்குப் பெரிய ஜாகீர் ஒன்று அளித்திருக்கிருர் பொதுமக்களும் இதற்கு [illegible] செய்கிருர்கள். முஸல்மான்கள் இந்த மடாதிபதியை

விலக்கப் பார்த்தார்கள். ஆனால், நைஜாம் அதற்கு இடங் கொடுக்கவில்லை. இன்றும்கூட ஹைதராபாத் திலுள்ள சீதாராமர் கோவிலுக்கும் மோஹரி (அடிலா பாத்) இள்ள மற்றொரு கோவிலுக்கும் நைஜாமின் பெயரால் மானியம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் வருடவருமானம் 50 அல்லது 60 ஆயிரமாகும். நைஜாமால் நாந்தரிலுள்ள சீக்கிய குருத்துவாரத்துக்குக் களிக்கப்பட்ட ஜாகீர், இருபதாயிர ரூபாய்க்கு மேல் வருட வருமானமுள்ளது.

ஒருமான்யத்தைப் பற்றிய பாரசீக மொழியில் உள்ள சில சன்னதுகளை இங்கு எடுத்துக்காட்டலாம். அவைகளில் ஒன்று, அஹமதுஷா பகதூர்காஜியால் 1167 ஹிஜ்ரியில் அளிக்கப்பட்டது.

'ஸ்ரீ தாகுர்ஜியின் நிவேதனத்திற்கும் அனுபோகத்திற்குமாக சீதால் தாஸ் பைராகிக்கு 17 பைகாக்கள் மூவாபி நிலம் (மானியம்) விடப்பட்டிருக்கிறது. இந்தமானியத்தின் மாசூலிலிருந்து, ஸ்ரீ தாகுர்ஜிக்குப் பூஜை முதலான காரியங்களை நிறைவேற்ற வேண்டியது. அக்பராபாத் ஜில்லா கஸ்பா அச்சநேரா ஜமீன்தார்களும் குடிகளும் இதை அறிந்து கொள்வார்களாக.'

'ஸ்ரீ தாகுர்ஜிக்கு இருபது பார் (நாழி) தானியம் அச்சநேரா பஜார் சௌத்ரி கொடுக்க வேண்டுமென்பதை அறிவாராக. மேற்படி பைராகி அதை இழக்கும்படி விடக்கூடாது. ரம்ஜான் 3-ம் நாள், 1139-ம் பசலி.'

மற்றொன்று சிஞ்ச் வாதிலுள்ள புகழ் பெற்ற கணேசர் கோவில் செலவுகளுக்காக ஷாஷாபுசதீன் கான் ஒரு ஜாகீர் அளித்தது.

## குவால்நாமா (உறுதிமொழிப் பத்திரம்)

பூனா பர்கானவைச்சேர்ந்த சிஞ்ச் வாதிலுள்ள மூராத் கோசேன் பேருக்கு குவால்நாமா (உறுதி மொழிப்பத்திரம்) கான்-இ-ஹிக்மத் நிஷான் நாகர் கான் அவருக்கு குவால் (உறுதிமொழி) வேண்டுமென்று தெரியபடுத்தியிருக்கிறார். அவர் அந்த ஊர் மக்களோடு வாழ்ந்து, தொடர்பு கொண்டு, நாட்டைச் செழிப்பாகவும், வளமாகவும் ஆக்க வேண்டுமென்று இவ் வுறுதிமொழி எழுத்துமூலம் கொடுக்கப்படுகிறது. அல்லாவின் அருளால் அவருக்கு யாதொரு ஆபத்தும் நேராதிருக்குமாக. இந்த குவாலியத் நாமாவின் தேதி: ஜெக்காத் 12, 1316 ஹிஜ்ரி. அலகாபாத்திலும் இதைப்போன்ற இரண்டு மான்யங்களின் பிர்மன்கள் (இந்தியச் சக்கரவர்த்திகளின் ஆதார பூர்வமான உத்திரவுகள்) இருக்கின்றன. ஒன்று, புகழ்பெற்ற மகேஸ்வரநாதன் கோயில் பூசாரிகளுக்குக் கொடுக்கப்பட்டது. அது ஔரங்கசீப்பால் அளிக்கப்பட்டது.

காசி ஜில்லாவிலுள்ள ஸகின் மௌஸா பஸ்த்தி (கிராமத்தில்) ஜக ஜீவன் மகன் கிர்தார், மகேசபுரம் பர்கானா ஹாவெலியிலுள்ள ஜாது மிஸ்ரா, பண்டித பாலபத்ர, மிஸ்ரா ஆகிய மூவரும் பூசாரிகள். அவர்களுக்கு ஔரங்கசீப் மான்யங்கள் அளித்திருக்கிறார்.

ஔரங்கசீப், மூல்தானில் தூத்லமாயி கோவிலுக்காக மிஸ்ரா கல்யாண தாஸுக்கு நூறு ரூபாய் படி கொடுத்தார் - எக்ஸ்ட்ரு அஸிஸ்டண்ட் கமிஷனர் உத்திரவுப்படி — மூல்தான் ஜில்லா செட்டில்மெண்டு ரிப்போர்ட்.

மகாகாளி கோவில் திருவிளக்குக்காக ஒவ்வொரு நாளும் நாலு சேர் நெய் உஜ்ஜயினி சர்க்கார் உக்கிராணத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று 1153 ஹிஜ்ரியில் சுல்தான் மஹம்மது மூராது உத்தரவிட்டார்,

முஸ்லிம் மன்னர்களும் அரசாங்கத்தோரும் கல்வியை மிகவும் ஆதரித்தார்களென்றும், பாரசீக பாஷை அரபிதவிர, சமஸ்கிருதத்தையும், இந்திய இலக்கியங்களையும், வெகுவாக ஆதரித்தார்களென்றும் பொதுப்படக்கூறல கும் இந்தியாவில், கல்வி அபிவிருத்திக்காக அவர்கள் செய்ததத்தனையையும் சுருக்கிக் கூறுதல் இயலாது. 'சக்கரவர்த்தியின் ஆதரவில் அநேகம் பொருள் பற்றிய வடமொழி நூல்கள் பாரசீகத்திலும், அரபியிலும் மொழி பெயர்க்கப்பட்டன. தவிர, அநேக முஸ்லிம் தலைவர்கள் தாங்களே சமஸ்கிருதத்தைப் படித்தார்கள்; கூசாமல் ஆதரித்தார்கள் முஸ்லிம் உலகத்திற்கு எளிதில் கிட்டும்படியாக, அரிய சமஸ்கிருத நூல்களை அவர்கள் பாரசீகத்தில் மொழி பெயர்த்தார்கள். பிறரையும் அக்காரியங்களில் ஊக்கினார்கள். இந்து மாணவர்களுடைய கல்வித் திட்டத்தில் சமஸ்கிருத நூல்கள் சேர்க்கப்பட்டன. சுருங்கக்கூறின், சமஸ்கிருதம் எல்லா வகையிலும் ஆதரிக்கப்பட்டது.' முஸ்லிம் இந்தியாவின் கல்வியைப்பற்றி எழுதும்போது, டாக்டர் ஜேம்ஸ். ஹெச். கவிஸ் கூறுகிறார். 'முஸ்லிம் அரசர்களும், இளவரசர்களும் மாணவர்களாகித் தங்களுடைய அறிவு நூற்பயிற்சிக்கு இந்து நூல்களைக் கற்றார்கள் மொகலாய ஓவியமுறை ரஜபுத்திர ஓவியமுறையோடு கலந்ததுபோல், முஸ்லிம் இலக்கியக் கல்வி இந்து இலக்கியங்களோடு கலப்புற்றது. இந்து இலக்கியங்கள் பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. அது காரணமாக, பாரசீக நாகரீகம் இந்து நாகரீகத்தையும் உருமாற்றியது.

தர்கா அல்லது ஒரு முஸ்லிம் சாதுவினுடைய சமாதியில் விழாக் காலங்களில், இந்தியா முழுதிருந்தும் முஸ்லிம்கள் எவ்வளவு கூடுகிறார்களோ அவ்வளவு இந்துக்களும் கூடுகிறார்கள். ஆஜ்மீர் ஷரீப்,

பீஹார் மாகாணத்தின் பீஹார்ஷரீப், மானெர்ஷரீப், புல்வாரி ஷரீப் உற்சவங்கள் இவ்வாறானவை. முஸ்லிம் பெரியார்களிடத்தில் அநேக இந்துக்கள் உண்மையாகவே குரு சிஷ்ய முறையில் நடந்துகொள்ளுகிறார்கள்.

வட இந்தியா முழுதும் முஸ்லிம்களுடைய மொகரம் கொண்டாட்டங்களில் இந்துப் பொதுமக்கள் கலந்து கொள்வதென்பது யாவருமறிந்தது. இந்துக்கள் முஸ்லிம்களைக் காட்டிலும் ஜனத்தொகையில் அதிகமான காரணத்தால், இவைகளில் முஸ்லிம்களைக் காட்டிலும் இந்துக்கள் அதிகமாகக் கலந்து கொண்டார்கள். இது நெடுங்காலத்திற்கு முன்பல்ல. ஊர்வலங்களில் மாத்திரம் இந்துக்கள் கலந்துகொள்ளவில்லை. முஸ்லிம்களைப்போல, இந்துக்களும் வீடுகளில் அதை துக்கத்திற்கும் வணக்கத்திற்கும் உரிய நாளாக அனுஷ்டித்தார்கள். அப்பொழுது கலியாணம், கிரஹப்பிரவேசம் முதலிய நற்காரியங்களெதுவும் கொண்டாடுவதில்லை, அனேக இந்துக்கள் தங்களுடை தாஜியாக்கள், சேப்பர்கள், வைத்திருந்தார்கள். இந்தப்பையன்கள் பச்சை ஆடை அடையாளங்களணிந்துகொண்டு முழுதும் பைக்குகள், பாஹிஸ்டிகள் ஆடி விடுவார்கள்; தண்ணீர் மாஷாக்குகளும் தாங்கிச் செல்வார்கள். வாள், ஈட்டி, சிலம்பம் முதலிய கருவிகளைக்கொண்டு அதிசயச் செயல்கள் புரிவதில் முஸ்லிம் அகார்களுடன் இந்து அகார்கள் போட்டியிடுவார்கள். இன்னும் மேலாக, இந்த அகார்கள் இந்து முஸ்லிம் என்று தனித்தனியாக இராமல் இருவரும் கலந்ததாகவும் பெரும்பாலும் இருப்பார்கள்.

மசூதிகளுக்கு முன்பு இந்து மேளத்தினால் இப்பொழுது மண்டைகள் உடைபடுவதுபோல் அக்காலத்தில் மொகரம் ஊர்வலத்தின் மேள இரைச்சலுக்கு, ஒருவிதத் தடையும் இருந்ததில்லை. முஸ்லிம்கள் தடைசெய்கின்ற சில இடங்களில், இந்து ஊர்வலத்தில் மேளம் வாசிப்பது பெரும்பாலும் முஸ்லிம் வாத்திய கோஷ்டியினரே என்பது வேடிக்கையான விஷயமாகும். அதைப்போன்றதே பசுக்கொலை விஷயமும், பக்ரீத் நாளன்று முஸ்லிம், பசுவைக் கொல்வது இந்துக்களிடையே பரபரப்பை உண்டுபண்ணுகிறதே. அந்தப் பசு பெரும்பாலும் ஓர் இந்துவால் ஒரு முஸ்லிமுக்கு விற்கப்பட்டதாயிருக்கும். அந்த முஸ்லிம் அதை எப்படி உபயோகப்படுத்துவார் என்பதும் அந்த இந்துவுக்கு நன்றாகத் தெரிந்தேயிருக்கும். (முக்கியமான ஒவ்வொரு நகரத்திலும், சிறப்பாகக் கண்டோன்மெண்டுகளிலும் பசுக்கள் கறிக்கும் தோலுக்குமாகக் கொல்லப்படுவதை இந்த இந்துக்கள் பொறுத்துக்கொள்வார்கள்) முன் காலத்தைக் கவனித்தாலோ, பாபர் காலத்திலிருந்து வரிசையாக ஆண்ட முஸ்லிம் மன்னர்கள், முழுவதும் பசுக்கொலையைத் தடுக்கா விட்டாலும், இந்துக்களுடைய மத உணர்ச்சிகளை மதிக்கவேண்டுமென்பதை வற்புறுத்தி வந்ததைக் காண்கிறோம். பக்கத்து வீட்டு இந்துக்களுடைய உணர்ச்சிகளை மதித்து பசுமாமிசம் சாப்பிடாத எத்தனையோ உயர் குடும்பங்கள் இருக்கின்றன 'ஈத்' சமயத்தில் பசு கொல்லப்படவில்லை. ஏனெனில், "அந்த நாளில் (ஈத்) சக்தியுள்ளவன் தன் வீட்டில் வெள்ளாட்டைப் பலியிட்டு, அந்நாளைப்பண்டிகையாகக் கொண்டாடுவான்" என்று நாம் அறிகிறோம்.' ஸாஹிருத்தீன் மகமது பாதுஷா காஜி (பாபர்), இளவரசர் நாஸருத்தீன் மகமது ஹூமாயூனுக்கு எழுதிய ரகசிய உயில் கவனிக்கத்தகுந்தது;

'மகனே! இந்திய ராஜ்யம் வித்தியாசமுள்ள மதங்கள் நிரம்பியது. அதன் ராஜ்யாதிகாரத்தை உனக்களித்த இறைவன் போற்றப்படுவாராக. உன்னுடைய இதயத்திலிருந்து மதக்குரோதங்கள் எல்லாவற்றையும் களைந்தொழிப்பது உன் பொறுப்பாகுமாக. ஒவ்வொரு மதத்தினுடைய வழிகளையுமறிந்து நீதி வழங்குவாயாக முக்கியமாக, பசுக்கொலையை விலக்கிவிடுவதன் மூலம் இந்திய ஜனங்களின் மனதைக் கவரமுடியும். இந்த தேசத்தின் ஜனங்களை அரசன் தன் நற்காரியங்களால் வசப்படுத்திவிடலாம்.

'சர்க்காரின் சட்ட திட்டங்களை அனுசரிக்கிற—எவ்வகுப்பாயினும் சரி-வகுப்பாரின் கோயில்களையும், குளங்களையும் இடிக்காதே, அரசரும் குடி ஜனங்களும், ஒருவர்மீதொருவர் அன்பாக இருக்கும்படியாக நீதி வழங்குவாயாக. கொடுங்கோன்மையால் இன்லாம் முன்னேறுவதைக் காட்டிலும் சேவையின் மூலமே இஸ்லாம் அதிகம் பரவும்.

'ஷியாக்கள், சுன்னிகளுக்குள்ள தகராறுகளைக் கவனிக்காதே; இஸ்லாத்தின் பலஹீனம் வெளிப்பட்டுவிடும்.

'பல மதங்களைச்சேர்ந்த குடிஜனங்களும் நான்கு இயற்கைப் பொருள்களோடு (மனித உடலாக அமைந்திருக்கிற நான்கு இயற்கைப் பொருள்கள்) ஒன்றுபட்டிருப்பார்களாக. அப்பொழுதுதான் நாட்டில் தகராறுகள் இல்லாமலிருக்கும். ஒற்றுமைப் படுத்துவதில் வல்லவனான தைமூரின் வாழ்க்கையனுபவங்களை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள் அதனால் நிர்வாகக்காரியங்களில் அனுபவம் பெறுவாய் ஜமெய்தியுல் அவ்வல் முதல் தேதி, 935'

முஸ்லிம்களுடைய தாராள மனோபாவத்திற்குச் சில உதாரணங்கள் குறிப்பிடலாம். இவை [illegible] சையது முகமதுவால் எனக்களிக்கப்பட்டவை.

புகழ்வாய்ந்த போர்ச்சுகீசிய சரித்திராசிரியர் பரிஸ்சௌஸா, தன்னுடைய தக்கான் - கீ - ஹாலத் எனும் நூலில் எழுதுகிறார் ‘ இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரிடம் ஒருவர் வேலைபார்த்தார்கள். முஸ்லிம் அரசர்கள், இந்துக்களை உயர்ந்த பதவியிலமர்த்தி சிறந்த பட்டங்களளித்தார்கள் ’ இந்துக்கள் வேற்றுமையாக நடத்தப்படவில்லை. அவர்கள் தங்களுடைய மதானுஷ்டானங்களையும், சடங்குகளையும், யாதொரு தடையுமின்றி நடத்திவந்தார்கள் இந்துக்களுடைய மத உணர்ச்சிகளுக்கு முஸ்லிம்கள் மிகுந்த மதிப்புச் செலுத்திவந்தார்கள்

ஏஷியாடிக் ஸ்டடீஸ் எனும் நூலில்,பக்கம்289ல் சர். ஆல்பிரட்லையால் எழுதுகிறார்; ‘ இந்தியாவை மத மாற்றுவதென்பது முஸ்லிம் அரசர்கள் மனத்தில் சிறிதும் கிடையாது. நிர்வாகத்தில் உயர்ந்த பதவிகள் அவர்களுடைய மதத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் என்றிருக்கவில்லை’

ஔரங்கசீப், ஷாஜஹானிடமும் அவருடைய மந்திரியிடமும் திறமையுள்ள அனேக இந்துக்களை வேலைக்கமர்த்தச் சிபாரிசு செய்தார் ; உதாரணமாக, எல்லிச்பூர் திவானிப்பதவி காலியானபொழுது, ராம்கரன் என்ற ரஜபுத்ர அதிகாரியொருவரைப் பலமாகச் சிபார்சு செய்தார். ஆனால், ஏதோ சில காரணங்களுக்காக ஷாஜஹான் அந்தச் சிபார்சை ஏற்றுக் கொள்ளவில்லை. வேறு ஒரு நல்ல மனிதன் கிடைப்பதரிது என்று ஔரங்கசீப் இரண்டாவது தடவையும் எழுதினார். ( ருக் ஆத் - ஆலம்கிரி, வால்யூம், 1, P. 114 ) ருக் ஆத் - ஆலம்கிரி, ஆதப் . ஏ - ஆலம் கிரி எனும் நூல்களிலும் இத்தகைய உதாரணங்களை ஏராளமாகக் காணலாம்.

ஔரங்கசீப் இந்துக்களை வலுவந்தமாக மதம் மாற்றினாரென்று பொதுவாக நம்பப்படுகிறது, ஆனால், அவருடைய மனப்போக்கைக் காட்டக்கூடிய ஓர் அதிசயச் சம்பவத்தை இங்கு விளக்கலாம். வாந்தேராவின் ராஜா இந்திரசோமன் திரும்பத் திரும்ப உத்தரவுகளை மீறியதால் அவனை ஷாஜஹான் சிறைப் படுத்தியிருந்தார். ஔரங்கசீப் தக்ஷணத்தின் சுபேதாராக நியமிக்கப்பட்டதும், அவனை விடுதலை செய்யுமாறு பலமாகச் சிபார்சு செய்தார் ஷாஜஹான் அவ்வரசன் மீது வெறுப்புக் கொண்டிருந்தபடியால் ஔரங்கசீப்பின் சிபார்சைப் புறக்கணித்தார். இந்திரசோமன் திரும்பத் திரும்ப மனவெறுப்பைத் தந்ததால் அவனை விடுவிக்க முடியாதென்றும், ஆனால் அவன் முஸல்மானாகும் பட்சத்தில் அவனை விடுதலை

# பலாத்காரத்தால் சமாதானம் நிலவாது.

—) ஸ்ரீ வினோபா பாவே )—

---

உலகத்தில் பலாத்காரத்தால் சண்டைகளும், யுத்தங்களும் ஒருக்காலும் முடிவடைய முடியாது. உலகம் இன்று விசித்திரமான சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கும் அரபர்களுக்கும் சண்டை, சீனாவில் உள்நாட்டுச் சண்டை அடைந்திருக்கும் அபாயகரமான நிலைமை ; இந்தோனேஷிய சுதந்திரத்தின் மீது டச்சுக்காரர்களின் படையெடுப்பு ; ஜப்பானிய தலைவர்களை தூக்கிலிட்டு சமாதானப் பிரியர்கள் நடித்துக் காட்டிய பயங்கரநாடகம்; இந்தியாவும் கூட ஹிம்ஸையிலிருந்து தப்பவில்லை. காஷ்மீர் பிரச்னை தீர்ப்பதற்கு அஹிம்சை மேற்கொள்ளப்படவில்லை. பொதுவாக எல்லா திசைகளிலும் யுத்தமே தென்படுகிறது. இதன் விளைவுகள் உலக சமாதானத்துக்கு பெரும் அபாயம் உண்டுபண்ணக்கூடும்.

கோடிக் கணக்கான மக்களுக்கு உணவும், உடையும் அளிக்கக்கூடிய சக்தி வீணில் விரயமாக்கப்படுகின்றது. ஜனங்களை பயமுறுத்துவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஏசுநாதரின் போதனைகளைப் பின்பற்றி, உலக சமாதானத்துக்காக முயலும் விதத்தில், ஜனங்களின் மன சாட்சியை தட்டி எழுப்பவே விரும்புகிறேன். ஹிம்சையை விட்டு உலகம் அஹிம்சைக் கொள்கையை மேற்கொள்ளாதவரை சமாதானம் நிலவ முடியாது.

---

செய்யலாமென்றும் எழுதினார். ஔரங்கசீப் இதைக் கடுமையாக எதிர்த்தார். ‘ இந்த நிபந்தனையை நிறைவேற்ற முடியாது அது விவேகமற்றது அற்பத்தனமானது அவனை விடுவிக்க வேண்டுமென்றால், அவனுடைய நிபந்தனைகளின் பேரிலேயே விடுவிக்க வேண்டும் என்று ஷாஜஹானுக்கு எழுதினார் இது சம்பந்தமாக ஔரங்கசீப், பிரதம மந்திரி ஷாபாயுல்லா கானுக்கு எழுதிய கடிதத்தை ஆதப் . ஏ - ஆலம் கிரியில் காணலாம்.

— பாபு ராஜேந்திர பிரஸாத்,
இந்தியா பிரிக்கப்பட்டால் ..........

…ted by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St.. Kumbakonam
Edited and published by MOULANA ABDUL HAKEEM, 13, K South, Kumbakonam